*SANA'S* PARIYARI PARAMAR

அரசு வெளியீடுகள்

1. தோணி
—வ. அ. இராசரத்தினம்
2. வாழையடி வாழை
—க. செபரெத்தினம்
3. பகவத்கீதை வெண்பா
—புலவர்மணி
4. இளமைப் பருவத்திலே!
—எம். ஏ. ரஹ்மான்
5. மரபு
—எம். ஏ. ரஹ்மான்
6. ஈழத்து இலக்கிய வளர்ச்சி
—இரசிகமணி
7. அண்ணல் கவிதைகள்
—அண்ணல்
8. பரியாரி பரமர்
—சாணா


Printed at the Rainbow Printers, Colombo-13

பரியாரி பரமர் * சாணா

அரசு வெளியீடு

சாணாவின்

# பரியாரி பரமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனாச் சித்திரங்கள்

# பரியாரி பரமர்

சாரு



அ ர சு வெ ளி யீ டு
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13. ( இலங்கை )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வெளியீடு: 8.

முதற் பதிப்பு: நவம்பர், 1964.

விலை ரூ: 1-90

# Pariyari Paramar

( A Collection of Pen Sketches. )

Author: SANA

Illustrator: SANA

Publisher: ARASU PUBLICATIONS,
231, Wolfendhal Street,
Colombo - 13, (Ceylon).

First Edition: 14th November 1964.

Price: Rs. 1.90

ரெயின்போ பிரிண்டர்ஸ், கொழும்பு-13.

## சமர்ப்பணம்

சைத்திரிகனை என்னை ஓர் எழுத்தாள னுமாக்கிய என் நண்பன் 'சோசி'க்கு நான் நன்றி செலுத்து முகமாக இந்த நூலை அவருக்குச் சமர்ப் பிக்கின்றேன்.

— சானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சங்கந் தொட்டுச் சீரிளமை குன்றாக் குமரியாக வாழ்வும் வளமும் பெற்றுப் பயின்று வருந் தமிழ்மொழி, 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பதற்கேற்ப, நவீன இலக்கிய உருவங்களையும் ஏற்றுள்ளது. சிறுகதை-நாவல் ஆகிய உரைநடைச் சித்திரிப்பு உபாயமுறையில் அமைந்த இலக்கியங்கள் தமிழுக்குப் புதியவை. அவை தமிழின் வனப்பிற்கு எழிலூட்டியுள்ளன என்பதும் உண்மை. சிறுகதைத் தொகுதிகளும், நாவல்களும் ஆயிரக்கணக்கில் தமிழில் வெளிவந்துவிட்டன.

கவிதைத் துறையிலே, மறுமலர்ச்சி சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தார் புதுமைக்கவி பாரதியார். அவ்வாறே உரைநடை இலக்கியத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கிய பெருமை வ. ரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைச் சாரும். வட்டார நலன் பேணுதல் என்னும் நோய் தென்னகத்திலும் பரவியுள்ளதினாற் போலும், அன்னாரைப் பற்றிய சரியான மதிப்பீடு இன்னமும் வாசகர்முன் வைக்கப்படவில்லை. தமிழில் எழுந்த பேனாச்சித்திர இலக்கிய உருவத்தின் பிதாமகர் அவரெனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றார். பேனாச் சித்திரங்கள், ஒரு கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது சிறுகதை அம்சங்களைக் கொண்டவையாகத் தோற்றலாம். ஆனால், சிறு கதையின் பிரதான அம்சமான கதாசம்பவ இசைப்பு பேனாச் சித்திரங்களில் இடம்பெறுவதில்லை. எனவே, சிறுகதை வேறு; பேனாச் சித்திரம் வேறு. இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது பேனாச் சித்திரங்கள் கட்டுரையின் சாயலைப் பெற்றவையாகத் தோற்றலாம். ஆனால், ஆழ்ந்து நோக்கும் பொழுது, கட்டுரைக்கு அந்நியமான கவிதா நயம் மிக்கச் செழிப்பான வண்ணச் சேர்க்கையைப் பேனாச் சித்திரங்களிலே காணலாம். எனவே, பேனாச் சித்திரங்கள் தனித்த இலக்கிய உருவம்



என்பதும் பெறப்படும். ஓர் எழுத்தாளன் வண்ணக் கலவைகளினதும் தூரிகையினதும் துணையின்றி, சொற்களின் துணை கொண்டு ஒரு உருவச் சித்திரத்தை (Portrait) நம்முன் நிறுத்தலாம். அல்லாவிடின், சமுதாயத்திலே புரையோடிக் கிடக்கும் பலவீனங்களை நையாண்டிப் பார்வையுடன் சித்திரிக்கலாம். இவ்வாறான முயற்சிகளிலே பேனாச் சித்திரங்கள் தோன்றுகின்றன.

இந்நூலிலே, சானா எழுதியுள்ள பன்னிரண்டு பேனாச்சித்திரங்கள் இடம் பெறுகின்றன. சானாவை ஈழம் நன்கறியும். அவரை ஒரு நல்ல ஓவியராகவும் நாடக நடிகராகவும் அறியாதவர்கள் இலர். ஆனால், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், பேனாச் சித்திரங்கள் எழுதும் முறையை ஈழத்து இலக்கிய உலகிற்கு வெற்றியுடன் அறிமுகப்படுத்திய சானாவை அறியாதோர் பலர். அவருடைய பேனாச்சித்திரங்கள் ஈழகேசரிப் பழங் கட்டுகளிலே தூங்கிக்கொண்டிருந்தன. அவற்றைப் புதிய கோலத்தில்- புதிய நூலாக நின்றுலவும் வகையில் நாம் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றேம். 'யாழ்ப்பாண மண்வாசனை வீச... சானுவின் மனதில் மிதந்து வந்த சம்பவங்களினதும் மனிதர்களினதும் தொகுப்பாக' விளங்கும் பரியாரி பரமரில் யாழ்ப்பாணத்து வழங்கு தமிழ்ச் சொற்கள் இடம் பெறுதல் இயல்பானது. எனினும், இச்சொற்கள் பிற பிராந்திய வாசகருக்கு அதிகஞ் சிரமந் தர மாட்டாதென்றே நாம் கருதுகின்றேம்.

*

அரசு வெளியீட்டின் தமிழிலக்கியத் தொண்டை இரை மீட்டிப் பார்க்கும் பொழுது திருப்தியாக இருக்கின்றது. புனைகதைத் துறையில் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலப் பரிசில்பெற்ற 'தோணி' என்னும் முதலாவது வெளியீடுடன் தொடங்கி 'அண்ணல் கவிதைகள்' வரை நமது வெளியீடுகள் வாசகரின் பேராதரவைப் பெற்றுள்ளன. இவற்றுட் சில நூல்களின் இரண்டாம் பதிப்புகளைச் சீக்கிரம் வெளியிடவேண்டிய நிலையிலிருக்கின்றேம். இவ்வாண்டில் புதிய இலக்கியத் துறைகளில் புத்தகங்கள் வெளியிட வேண்டுமென்று தீர்மானித்தோம். இதன் பயனுக, ஈழத்தின் முதலாவது உருவகக்கதைத் தொகுதியாக 'மரபு' வெளிவந்தது. அதைத் தொடர்ந்து, ஈழத்தின் தற்கால இலக்கிய வரலாற்றைக் கூறும் முதனூலாக இரசிகமணி கனக- செந்திநாதன் அவர்களின் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' வெளியாயிற்று. இப்பொழுது ஈழத்தின் முதலாவது பேனச் சித்திரத் தொகுதியை வாசகருக்கு அளிக்கின்றேம்.



தரமான நூல்களை, எளிமை தழுவிய அழகிய அமைப்புடன் வெளியிட வேண்டுமென்பது நமது இலட்சியமாகும். இந்நூலுக்கு அழகூட்ட, ஒவ்வொரு பேனச் சித்திரத்திற்கும் படங்கள் சேர்த்துப் பொலிவூட்டியுள்ளோம். இந்நூலைத் தமிழ் இலக்கிய உலகம் உவகையுடன் வரவேற்குமென்பது நமது நம்பிக்கையாகும்.

வணக்கம்.

எம். ஏ. ரஹ்மான்
அரசு வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நண்பர் சாஹு அவர்கள் பள்ளிப் பிள்ளையாக இருக்குங் காலந் தொடக்கமாக அவரை நான் நன்கறிவேன். படிக்குங் காலத்திலேயே நாடக மேடையில் நகைச்சுவை நடிகராகப் புகழ் ஈட்டிக்கொண்டார். சிறந்த சைத்திரிகராகவும் மலரத் தொடங்கினுர். ஈழநாட்டிலே ஈழகேசரி என்ற வாரப் பத்திரிகை உதயமாயிற்று. அதன் அதிபர், புரவலர் திரு நா. பொன்னையா அவர்களுடைய இடையரு முயற்சியின் பயனுக, ஈழகேசரி, தாய்நாட்டிலும் சேய்நாட்டிலும் தமிழறிஞர்களின் நன்மதிப்பைப் பெற்றது. ஈழகேசரியில் இளம் எழுத்தாளர்களை எழுதுமாறும், இளம் சைத்திரிகரை சித்திரம் தீட்டுமாறும், கவிஞர்களைச் செஞ்சொற்கவி இயற்று மாறும் தெரிந்தெடுத்து ஊக்கமளிப்பதில் கைதேர்ந்தவர் ஈழகேசரி பொன்னையா அவர்கள். தமது பத்திரிகைக்கு ஆசிரியராக திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களையும், சைத்திரிகராகச் 'சாஹு' அவர்களையும் தெரிந்தெடுத்து நியமித்தார்கள். 'சோசி'யும் 'சாஹு'வும் ஈழகேசரியின் இரு கண்களாகத் திகழ்ந்தனர். இவ்விருவரும் கடமை புரிந்த காலந்தான் ஈழகேசரியின் பொற்காலம் எனலாம். ஆனந்தவிகடன் ஆசிரியராக கல்கியும், சித்திரக்காரராக 'மாலி'யும் எவ்வாறு இணைபிரியா நண்பர்களாக இருந்தார்களோ, அவ்வாறே ஈழகேசரியில் 'சோசி'யும் 'சாஹு'வும் விளங்கினுர்கள். ஈழகேசரி ஆண்டு மலர்களில் அநேக வர்ணச் சித்திரங்களைச் 'சாஹு' தீட்டியுள்ளார். அட்டைப் படங்களும் இவருடைய கைச்சரக்காக விருந்தன.

நண்பர் 'சாஹு' நையாண்டியுடன் தீட்டும் கேலிச் சித்திரங்களைக் கண்ணுற்று வயிறு குலுங்கச் சிரிப்பது வழக்கம். ஆனுல், திடீரெனச் சைத்திரிகன் 'சாஹு' தூரிகையை வைத்துவிட்டுப் பேஞவை எடுத்துச் சொல்லோவியங்களை யாழ்ப்பாணத் தமிழிலே தீட்டத் தொடங்கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை வட இலங்கை வாழ் மக்களின் பண்பாட்டினையும் நம்பிக்கைகளையும் பின்னணியாக வைத்து, நகைச்சுவை ததும்பச் சித்திரித்தன. அவற்றிற்கு வாசகரிடம் நல்ல வரவேற்புக் கிடைத்தது.

இன்று 'சானா' இலங்கை வானொலியில் தமிழ் நாடகத்துறைத் தலைவராகக் கடமையாற்றுகிறார். 'லண்டன் கந்தையா'வை அறியாத வானொலி நேயர்கள் இருக்கமாட்டார்கள். இன்று நடிகருக்குப் பயிற்சியளித்தும், வானொலி நாடகங்கள் தயாரித்தும் நாடகக் கலைக்குத் தொண்டாற்றுவதிலே தமது நேரத்தின் பெரும் பகுதியைச்செலவிடும் 'சானா'வின் பேனா வன்மைக்கு இந்நூலே தக்க சான்று பகரும். தமிழன்பர்கள் இந்நூலைப் பெரிதுவந்து வரவேற்பார்களாக!

குல. சபாநாதன்.

"முருகன் அருள்"
இராமகிருஷ்ண ரெரேஸ்
வெள்ளவத்தை.

# என்னுரை

இன்று, இலங்கை வானொலியில் நான் தயாரிக்கும் நாடகங்களைக் கேட்டு மகிழும் பல இரசிகர்களுக்கு இந்த சானாவை நன்கு தெரியாது. என்னை ஒரு நகைச்சுவை நடிகனாக மட்டுமே தரிசிக்கும் பல அன்பர்களையும் நானறிவேன். இதன் காரணமாகத்தான் நான் என்னைப் பற்றிச் சிறிது விருத்தாந்தமாக எழுதலாமென்று நினைக்கின்றேன். எழுத்தாளருக்கு இயல்பாகவுள்ள 'தலைக்கன'த்தினாற் சுய புராணம் பாடுகின்றேன் என்று மட்டும் நினைத்து விடாதீர்கள்.

யாழ்ப்பாணம் — பரமேஸ்வராக் கல்லூரியில் படிக்கும் காலத்தில், தமிழ் வகுப்பைக் 'கட்' பண்ணி 'ஆட்கிளா'ஸிலிருந்து சித்திரம் வரைந்து கொண்டிருப்பேன். சித்திரத்தில் எனக்கு ஒரு வகைப் 'பைத்தியம்'. இதன் காரணமாக, சென்னை அரசாங்கச் சித்திரக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஐந்து வருடம் பயிற்சி பெற்று, பின்னர் இலங்கை 'டெக்னிக்கல்' கல்லூரியிற் பயிற்சி பெற்றேன். 1937 ஆம் ஆண்டில், ஈழகேசரியில் சைத்திரிகனுகச் சேர்ந்தேன். அப்பொழுது சோ. சிவபாதசுந்தரம் என்பவர் ஈழகேசரியின் ஆசிரியராகக் கடமை பார்த்தார்.

''பத்திரிகைக்கு ஏதாவது எழுதுங் காணும்; எழுதுங்காணும்'' என்று என்னை இவர் நெடுக 'நெருக்கி'க் கொண்டிருப்பார். நான் தமிழைத் தமிழாகப் படிக்காததால் 'தமிழை' எழுதப் பயமாக இருந்தது. ஆனுல், ஆசிரியரோ விடாக்கண்டர். என்னைச் சும்மா விடவில்லை. ''சும்மா பயப்படாமல் எழுதும்'' என்று வற்புறுத்தி வரலானுர். 'ஆய்க்கினை' தாங்க முடியாது 'மரியாதை எதற்கு?' என்னும் மகுடத்தில் ஏதோ 'ஒன்று' எழுதினேன். அது ஈழகேசரி ஆண்டு மலரொன்றில் வெளியாயிற்று. வாசகர்கள் அதை வரவேற்ருர்கள், எனக்கும் மனேதிடம் பிறந்தது. அதன் பின்னர், 'சோசி' என்றன்பாக அழைக்கப்படும் சிவபாதசுந்தரத்திடம் தமிழை முறையாகப் பயின்றேன்.



சைத்திரிகனுன என் சிந்தனையில் எழுந்தவற்றை வைத்து, தூரிகைக்குப் பதிலாகப் பேனுவைப் பிடித்து வரைந்தேன். இவை அனைத்தும் ஈழகேசரியில் வெளியாயின. அவற்றுட் சிலவே பரியாரி பரமர் என்னும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. இதன்கண் இடம்பெறுஞ் சித்திரங்கள் அனைத்தும் 1939ஆம் ஆண்டிற்கும், 1945 ஆம் ஆண்டிற்குமிடையில் எழுதப்பட்டவை என்பதை வாசகர் மனத்தில் வைத்திருத்தல் நன்று.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நூல் நிலையத்திலிருந்து இவற்றைச் சேகரித்து, பிரதிசெய்து எனக்கு அனுப்பி வைத்த என் நண்பன் ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களுக்கும், இவ்வாருன ஒரு புத்தகத்தை வெளிக்கொணர்தல் வேண்டும் என்று என்னைச் சதா 'தொந்தரவு' செய்த அரிய நண்பர் இரசிகமணி கனக - செந்திநாதன் அவர்களுக்கும் என் நன்றிகள். இக் கட்டுரைகள் ஈழகேசரியில் வெளிவந்த காலங்களிற் படித்து, இரசித்துத் தன் அபிப்பிராயங்களைச் சொல்லிவந்த என் நண்பர் குல - சபாநாதன் அவர்கள் அணிந்துரை தந்துள்ளார்கள். தமிழ் இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப் பணியையே மூச்சாகக் கொண்டுழைத்து வரும் ஈழத்தின் பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் இத்தொகுதியின் அமைப்பிலே பல ஆக்க பூர்வமான ஆலோசனைகளைத் தந்தார்கள். இவ்விருவருக்கும் நான் மனம் நிறைந்த நன்றிகள் செலுத்தக் கடப்பாடுடையேன்.

ஈழத்துத் தமிழ்ப் புத்தக வெளியீட்டுத் துறையில், ஆதாயத்தை முன் வைக்காது, தரமான நூல்களை அழகிய முறையிலே வெளியிட்டுத் தமிழ் இலக்கிய உலகை வளப்படுத்தி வருதலையே இலட்சியமாகக் கொண்டுழைத்து வரும் அரசு வெளியீட்டினரின் நூலாகப் பரியாரி பரமர் வெளிவருவதில் பேருவகை அடைகின்றேன். இதனை மிக அழகாக வெளியிட்டுள்ளமைக்கு அரசு வெளியீட்டின் அதிபர் ஜனாப் எம். ஏ. ரஹ்மான் அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

— சானு.

இலங்கை வானொலி,
கொழும்பு-7.
30-10-64.

# உள்ளே


பரியாரி பரமர் ... 17

தந்தை ... 27

ஆறுமுகச் சட்டம்பியார் ... 32

மரியாதை எதற்கு? ... 43

தயமு அருயாப பெருமான் ... 53

மேல் ஸ்தாயி ... 65

அம்பட்ட அம்பலவன் ... 71

சாதி பேதம் ... 82

பத்திரிகாபிமானம்
வளருமா? ... 90

ஈக்கள் ... 100

முணுமுணுப்பு மசோதா ... 105

சானுவைப் பற்றி ... 111

சண்முகநாதனும்
சானுவும் ... 112


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரியாரி பரமர்

பரியாரி பரமர் என்றால் பாம்பு படுத்துறங்கும்; விஷம் விட்டிறங்கும். எங்களூரில் இவரைத் தெரியாதவர்கள் இல்லை. சிறு வியாதி சிரங்கு முதல், கடும் வியாதி காய்ச்சல் வரை தோன்றியதற்கும், மறைந்ததற்கும் இவர்தான் காரண கர்த்தர். பேதிக்குக் கொடுப்பதில் பெரும் பெயர் வாய்ந்தவர்; கைபிடியில் கைதேர்ந்தவர்; கண் வைத்தியத்தில் கடும் பண்டிதர்; மாட்டு வைத்தியத்தில் மகா நிபுணர்.

தமிழறிவுள்ளவர். பரம பக்தர். புராணத்திற்குப் பயன் சொல்வதில் புகழ் பெற்றவர். ஆன்மாக்கள் நல்வினை தீவினைக்கு ஈடாகப் பிறந்து, இறந்து, உழலுவது என்பர் சித்தாந்த சாத்திரிகள். ஆனால், எங்களூரில் பரியாரி பரமரை அறியாமல் ஒருவர் சுகமாகப் பிறந்ததுமில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாக இறந்ததுமில்லை. நன்மையாகவோ தீமையாகவோ, எதுதான் நடந்த போதிலும் பங்கு பற்றுவார் பரமர். மானிப்பாய், இணுவில் போன்ற பெரும் ஆஸ்பத்திரிகளில் சந்தேகப்பட்டவர்கள் இவரிடம் வருவார்கள், இவரும் சந்தேகப்பட்டால், மறு உலகம் செல்வார்கள். இவர் செய்த பாவம் யாதோ அறியோம். இவர் மனைவி நாற்பத்திரண்டாவது வயதில் உயிர் துறக்க, தனது மூத்த மகனைச் சிங்கப்பூருக்கு அனுப்பிவிட்டு, இளையவனைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டார். பிற்காலத்தில் ஒருவன் இல்லாவிட்டால், பரம்பரைக் குணம் பாழாய்ப் போய்விடு மல்லவா?

சிங்கப்பூரிலிருந்து கிரமமாகப் பணம் வந்துகொண்டிருந்தது. அதைக்கொண்டு துத்தம், துருசு, பெருங்காயம் முதலிய மருந்துச் சரக்குகளை வாங்கி, தனது தொழிலைச் சீராக நடத்தி வந்தார். கலியாண வீடு, சாவீடுகளில் தனது மகன் அனுப்பிய பச்சைக் கம்பளிப் போர்வையுடன் பிரசன்னமாவார். வெள்ளிப் பூண் போட்ட பிரம்பு கையில்; ஒரு சோடி செருப்பு கால்களில்; நாலுமுள வேட்டி



அரையில்; மருந்துச் செப்பு மடியில். இவைகளெல்லாம் ஒருங்கு திரண்ட வடிவமெடுத்தவர்தான் பரியாரி பரமர். மழை காலம் பனி காலங்களில் மகன் அனுப்பிய 'காக்கி'ச் சட்டையை முதுகுப் பக்கத்தில் பூட்டத்தக்கதாக அணிந்து திரிவார். இப்படியணிந்தால் நெஞ்சில் குளிர்பிடியாது என்பது இவர் கொள்கை. இக்காலங்களில் இவருக்குத் தொய்வு தோன்றும். தனது வைத்தியத்தில் அதிகம் நம்பிக்கை யில்லாதபடியால் 'பள்' வல்லியைக் கொண்டே வைத்தியம் செய்விப்பார், வல்லி இவரது கையாள்.

தேவையான சகல மூலிகைகளையும், வேர் விராய்களையும் பரமருக்கு உதவி வந்தவர் வேலர். மருந்தரைத்தல், குளிகை உருட்டல் முதலிய பெருந் தொண்டுகளையும் வேலர் ஆற்றிவந்தார். பரமர் நினைத்தால் போதும் வேலர் செய்து முடிப்பார். பரமர் இல்லாவிட்டால் வேலர் இல்லை; வேலர் இல்லாவிட்டால் பரமர் இல்லை! அவ்வளவாக ஒருவரை ஒருவர் அறிந்து அதற்கேற்றவாறு நடந்து வந்தார்கள். 'சினிமா' மடுவங்களிலும், நாடகக்கொட்டகைகளிலும் இருப்பதுபோல பரமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலும் மூன்றுவித ஆசனங்கள் உண்டு ... இல்லை, மூன்றே ஆசனங்கள்தான். சாய்வு நாற்காலி பரமருக்கு; பதிந்த வாங்கு வேலருக்கு; தரை வல்லிக்கு.

நெஞ்சடைப்பு, வயிற்றுக் கோளாறுகள் போன்ற கழுத்துக்குக் கீழேயும் அடிவயிற்றுக்கு மேலேயும் உள்ள 'சேஷ்டை' கள் எல்லாவற்றிற்கும் பெருங்காயக் குளிகை. சருமத்தில் உண்டாகும் புண், சொறி சிரங்கு, குட்டை, வேர்க்குரு, கரப்பன் முதலிய நோய்களுக்கு துத்தம் துருசு வெளிப் பூச்சு.

'துத்தமும் துருசு மாருப்
புண்ணுடன் சுவாச காசம்
பத்திரமான கண்ணிற்
படலமே காசம் போக்கும்
உத்தம மான வேல
முறு வாந்தி விக்கல் வெப்பு
மெத்திய சுரமே யீழை
வீட்டுமென் றுரைப்பர் சித்தர்',

என்று சில நேரங்களில் வாகடம் பாடுவார் பரமர். துத்தம் துருசு சேர்ந்த ஔஷதங்களை மூன்று பெரும் போத்தல்களில் அடைத்து வைத்திருப்பார். ஒன்று ...துத்தம் துருசு முக்காற் பங்கு; நீர் காற் பங்கு. இரண்டு .. துத்தம் துருசும் நீரும் சம பங்கு. மூன்று .. துத்தம் துருசு காற் பங்கு; நீர் முக்காற் பங்கு. சிங்கப்பூரிலிருந்து மூத்தவன் அனுப்பிய கறள் பிடித்த 'ரொட்ஜர்ஸ்' கத்தி, சாவணம், காம்புச் சத்தகம் முதலிய வெட்டுக் கொத்து ஆயுதங்களும் இவர் வசம் எப்பொழுதும் இருக்கும். வேறு பல மூலிகைகளையும் வேர் குழைகளையும் என்ன செய்வதென்று அறியாதவராய் முற்றத்தில் பரப்பி வைத்திருப்பார். இவரின் 'வைப்புச் செப்பு' இவ்வளவுதான். இவற்றைக் கையில் வைத்துக்கொண்டு வேலரின் உதவியால் தீவிர பரிகாரம் செய்து வந்தார் பரமர்.



புண் வைத்தியமென்றால் அயலூரிலிருந்தும் அழைப்பார்கள். விதம்விதமான வியாதிகளுக்கு விதம்விதமான வைத்தியம். பிற பொருள் உடம்பில் நுழைந்து கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்தால், சாவணம் கொண்டு பிடுங்கி, இதரை வாழைப் பொத்திப்பாலை வெளியில் பூசி, அதே பூவில் வறைசெய்து பத்தியமுமென்பார். நாய் கடி, பூனை கடி, எலி கடி முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிகளுக்கு முருங்கையிலை அரைத்து, சுண்ணும்பு கலந்து சாத்துவார். பாம்புக் கடிக்கு வேப்பிலை கையில் கொண்டு உருக் கொண்டு சந்நதமாடி மந்திரிப்பார்.

'' வெட்டலாற் கால்கை யூறு
மிகு நகச் சுற்றிஞலே
தட்டிடு கொதிப்பே யாதி
சார்ந்திடி லுப்பு மஞ்சள்
மட்டதாயரைத்து நீரில்
வளமுடன் கரைதீ வைத்தே
சுட்டிட வெடுத்துச் சீலை
தோய்க்கக்கட்டாறு மன்றே.''

என்று குரலெழுப்பி, அனுபவித்து, இராக மாலிகையிற் பாடிஞரென்ருல், நகச்சுற்று, நோயாளியை மூன்று தரம் வலம் வந்து விடைபெற்றேகும்.

இவர் சொல்லிய முறையில் பத்தியம் வைத்துக் கொடுப்பதென்ருல், சமையல் செய்கிறவர்களுக்குப் பயித்தியம்தான். இதற்கும் பரியாரி பரமர் மருந்து செய் வார். நோயாளிகளின் பிறந்த தினம், நேரம், நட்சத்திரம், லக்கினம் முதலிய வைகளை அறிந்து, பழம் பஞ்சாங்கங் களைப் புரட்டி, குறிப்பெழுதி, ''சனி



உமக்கு எட்டாமிடத்திலே இருப்பதால் தான் உமக்கு இந்த வியாதி கண்டிருக் கிறது. ஆஞல், வியாழ சுகமிருப்பதால்''. என்று கை விரல்களை எண்ணி வாய்க்குள் ளும் முணுமுணுத்து,'' வேலரே அந்த சீத கேசரி மாத்திரையில் நாலு எடுத்து வாரும்'' என்று கட்டளையிடுவார். வேல ரும் பெருங்காயக் குளிகையில் நாலைப் பக்குவமாகச் சரைகட்டி நோயாளி கையில் கொடுக்க, ''காலை இரண்டு தேனி லும், மாலை இரண்டு முலைப்பாலிலும் உரைத்தருந்தும்'' என்று கூறி நோயாளி யைக் கைவிட்டு மறு தொழிலில் பிர வேசிப்பார் பரமர். வேலர் பத்தியம் எவ்வகை என்று அனுசரித்தனுப்புவார்.

பரியாரி பரமரின் வைத்தியத்தில் பல முறைகள் உள. சில வியாதிகளைச் சீக்கிரத்தில் குணப்படுத்தலாம். உதாரண மாக சில குழந்தைகளுக்குப் பரமரைக் கண்டால் நோய் நீங்கும். சிலருக்கு அதி கரிக்கும். இஃது அவரது முகராசி. ஆண் பெண் இரு பாலர்க்கும் தலையிடி முதலிய 'தொற்றி' நோய் கண்டு, பரமர் கைப் பட்டால் குணமாகாமலுமிருக்கும். இஃது இவர் கைவாசி. நாட்பட்ட சகலவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான ரோகங்களுக்கும் இவரிடத்தில் கைகண்ட சில சூரணங்கள் உண்டு. உதாரணமாக, வாலிபந் தொட்டே வயிரவிக்குக் குடிகொண்டு வந்த அடிவயிற்றுக் கோளாறு, பதினைந்து நேர வேளை சண்டமாருதச் சூரணத்தால் வெய்யிலைக் கண்ட பனிபோல் ஆகிவிட்டது.

வெறுந்தமிழைப் பேசியும், தனித்தமிழ் எழுதியும் வருபவர்களும், ஆங்கிலம் படித்த மாயாவாதம், 'கிறீக்' படித்த வேதாந்தம், முத்திக்குக் குறுக்கு வழி கண்ட துவைதம் அத்துவைதம் வெறும் சமஸ்கிருதம் இன்னும் இப்படி இப்படிப் புதியதும் பழையதுமான தொல்லைகளில் ஈடுபட்டோ மன நோயைத் தேடியதுமல்லாமல், எண்சாண் உடம்பையும் அதற்குப் பிரதானமான தலையையும் வீணுக நோய்க்குள்ளாக்கிக் கொண்டு வருந்துவோருக்கு கண் கண்ட சிரஞ்சீவிபோல இவர் கையில் ஒரு தைலம். இதன் குணங்கள், தலைக் கொழும்பைக் கரையப் பண்ணும்; தலைவீக்கத்தை வற்றப் பண்ணும்; சகலவித வாதங்களையும் போக்கடிக்கும். கைகாற்பிடிப்புப் போன்ற 'பிடிச்சுராவி' வியாதிகளை மடியச் செய்யும். நாரிப்



பிடிப்பை இரத்துச் செய்யும் ... இத்தியாதி!

பரமரின் தொழில்கள் பல. சோதிடம், மாந்திரீகம், காணி வழக்குத் தீர்த்தல், பேயகற்றல், கணவன் மனைவி சச்சரவு அகற்றல். இவை அவற்றிற் சில. இராம நாடகத்தில் இராமர் வேஷம் போட்டாடினுர் என்ருல், சீதாதேவி மாத்திரம் அந்நேரத்தில் உயிருடனிருந்தால் கண்ணீர் விட்டு அழத் தொடங்கிவிடுவாள். வனவாசத்தில் உண்பதற்குச் சரியான உணவு கிடைக்காது, அகப்பட்ட பழங்களையும் காய்களையும் உண்டு, நூறு இருத்தல் நிறைகொண்ட மரக்கிரீடத்தை தலையில் மாட்டிக்கொண்டு இராமபிரானுடுவாராஞல் இவர் உடம்பு துரும்பாக இளைத்துப் போய்விடமாட்டாதா? அப்படி உடம்புக்கு ஏதாவது நேர்ந்தால் வல்லி இருக்கிருன் என்ற துணிவுதான் போலும்! மகாபாரதத்தில் துரியோதனஞக வேஷந் தரித்து ''அண்ணன் தம்பி அஞ்சுபேரும் ஆடிஆடி வாருங்கள் ..நான் ...ஆடும் இவ்வாட்டத்தைப் பார்த்து ஒட்டம் பண்ணச் செய்கிறேனே '' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறிச் சுழன்று ஆடினாரானால், நாட்டுக் கூத்துப் பார்க்க வந்தவர் பலருக்கு வீட்டுக்குப் போக மனம் வரும். சிலருக்கு குடல் கலங்கி வெளியில் வரும். இதற்கும் வைத்தியம் செய்வார் பரமர்.

எங்களூரில் பரமர் பெரும் புகழைப் பெற்றதற்கு மூல காரணம் அம்பாளை அநுதினமும் இடைவிடாமல் உபாசனை செய்ததே. மானிடராய்ப் பிறந்தவர்கள் பிறகு என்ன பிறவிதான் எடுத்த போதிலும், நோயின்றிச் சுகமாக வாழ வேண்டுமென்பதே இவருடைய சீவியத்தில் குறிக்கோளாக இருந்தது. அல்லாவிட்டால், விதிவசத்தால் இறந்தவர்களை விட, பரியாரி பரமர் மற்றவர்களுக்கு விதேக முத்தி கொடுத்து வந்தது எப்படி?



*

பரியாரி பரமர் உரைக்க வேலர் பஸ்பம் செய்கிறார்.

# நத்தை

சில தினங்களுக்கு முன்னர் என் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது பல கதைகளும், அக்கதைகளை உண்மையென்று நிரூபிக்கப் பல நியாயங்களும் பிறந்தன. ஒருவித காரணமுமின்றி இருந்தாற்போல் ''நீர் நத்தையைப்பற்றி என்ன நினைக்கிறீர்?'' என்று ஒரு போடு போட்டார். இக்கேள்வி பள்ளிக்கூட நாட்களில் வெளி வந்திருந்தால் என் பாடு பெருந் திண்டாட்டமாகவே இருந்திருக்கும். ''நத்தை ஒரு ....'' என்று என் மூளையைக் கிளறிக் கொண்டிருந்திருப்பேன். (அதற்குள் ஏதாவது இருந்தால்தானே கிளறப்படுவதற்கு?) நாயென்றால், உடனே ''நாய் ஒரு நாலுகால் மிருகம்'' என்றும், அல்லது கோழி என்றால் ''கோழி ஒரு இரண்டு கால் பட்சி'' என்றும் முன்பின் யோசியாமல் எழுதித் தள்ளிவிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நத்தையைப் பற்றி முக்கியமாக என்ன எடுத்துச் சொல்லக் கூடும்?' சரியாகச் சொன்னீர்கள் ..... அது நத்தையைப் போல மிக மெதுவாய் ஊர்ந்தூர்ந்து செல்லும். ஒரு நாள் நான் ஒரு நத்தையைச் சிறிது நேரத்திற்குப் பின் தொடர நேர்ந்தது. எனக்கோ பெருஞ் சினமாகிவிட்டது. அப்படி ஏன் இருந்தது என்று எனக்குத் தெரியாது. (ஆறுவது சினம்.)

நத்தை எங்காவது போக்கு வரத்துச் செய்ய வேண்டுமென்ருல், தசை நரம்புகளின் அலை போன்ற சுருக்குகளின் மீது இழுபறிப்பட்டு, சடலத்தின் கீழ்ப் பகுதியினுல் பயணஞ் செய்யும். இவ்வித அனுபவம் உங்களுக்கு எப்பொழுதாவது ஏற்பட்டிருந்தால் அச் சுற்றுப்பிரயாணம் திருப்திகரமா யிருந்திருக்க முடியாது. அத்துடன் முதுகுப் புறத்திலும் உங்கள் வீட்டைச் சுமந்துகொண்டு போக நேரிட்டால், முன்னேற்றத்திற்கேற்ற அறிகுறிகள் இருப்பதாகத் தோற்றவில்லை. இவ்வகையான மனேபாவம் நத்தைகளுக்கு ஒருக்காலும் ஏற்படாது. (மனத்தை ஒன்றிலேயே நாடவிடும் தன்மை நத்தைகளிடம் இல்லை.)



ஒரு மணி நேரத்திற்குப் பத்தடி அல்லது ஒரு நிமிஷத்திற்கு இரண்டு அங்குலம் அளவிற்முன் சாதாரண நத்தை சராசரியாக நகரும். அதுமட்டுமா ... இல்லை. சில நிமிஷங்களுக்குள் ஒரு கணமாவது ஒரு முறை இளைப்பாறுவதற்காகத் தங்கவும் வேண்டும். இதே வேகத்தில் அது நூறு யார் ஓட்டத்தை முப்பது மணி நேரங்களில் அனேகமாக முடிக்கக் கூடும். நத்தைகளுக்கு வீரியங் குறைவு. பச்சைக் கீரைச் செடிகளை சும்மா மென்று தின்று திரிந்தால் தைரியம் ஏற்படுமா? (பெரும் விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சிகளிலிருந்து நத்தைகளுக்கு வாய்ப் பிரதேசங்களில்தான் சுவையுணர்ச்சி அதிகமாகத் தோற்றும் என்று தெரிய வருகிறது.)

சில குறித்த அலுவல்களுக்குப் போவதற்கு, நத்தை ஒருபொழுதும் துரிதப்படமாட்டாது. எப்படியென்ருலும் குறித்த திகதி, இரண்டொரு நாள் பிந்தித்தான் இருக்க வேண்டுமென்று அதற்கு ஒரு நம்பிக்கை வரும். அதனுல் வரும் பயன் என்ன? சென்ற வெள்ளிக் கிழமை கோணற் புளிய மரத்தின் கீழ் கட்டாயம் சந்திக்கிறேனென்று சொன்னவரை எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக்கொண்டிருக்கும் ஓர் அழகியை, இவர் எப்படியாவது சந்திப்பார். சிறிது நேரத்திற்குப்பின் இருவரும் முட்டைகளிட்டு ஆடி ஆவணியிற் குஞ்சுகளும் பொரித்து விடுவார்கள். இந்த ஐம்பதுக் கைம்பது ஒப்பந்தம் எங்களுக்குப் பார்க்கப் பெரும் பயித்தியக்காரத்தனமாயிருக்கும். (ஆனல் ஒன்று மாத்திரம் நிச்சயம். நத்தை ஒன்றில் தகப்பன் நத்தையாகவிருக்கும்; இல்லையேல் தாய் நத்தையாகவிருக்கும், சும்மா விளையாட்டாக இருக்க மாட்டாது.)


பனி நத்தைகள் ஈரமான சுற்றுப்புறங்களில் வசித்தற்கு விருப்புடையன. திடகாத்திர சீவியத்திற்கு அளவுக்கு மிஞ்சிய நனைவு அவசியம். சில நத்தைகள் வழக்கத்தில் பெருஞ் சமுத்திரத்தில் வாழ்ந்து, அதிர்ஷ்ட வசத்தால் கரையோரமாக அலசி வீசப்பட்டன. தரையும் நீரைப் போல் நனைந்திருக்குமென்பது அவற்றின் எண்ணம். (அதற்கென்ன... நாங்களும் தப்பெண்ணங்கள் கொள்வதில்லையா?) கவனமாக உலாவாவிட்டால் தாங்கள் காய்ந்து கருவாடாகி விடுவார்களென்ற பயமும் ஒரு புறம். ஆனபடி



யாற்றான், கசிவான இடங்களையும் ஈரமான தட்பவெட்ப நிலைகளையும் இவை தேடித் திரிகின்றன.

இந்தவித ஈர மனப்பான்மையைப் பற்றி முறையிட நாம் எத்தனித்தால், அம் முறைப்பாடுகள் நத்தைகளுக்குத்தான் உத்தமம் என்பதை நாம் மறக்கக் கூடாது.

குறிப்பு:— தமிழரின் கலை, சமய சம்பந்த முன்னேற்றத்திற்கு நத்தை கொடுத்துதவியது 'வேகம்'.




முற்போக்குக் கொள்கையில்லாக் கட்சியைச் சார்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகச் சட்டம்பியார்

நோய்ந்து காய்ந்த தலைமயிர் காற்றிலசைய, ஒரு பக்கக் கொடுப்புக்குள் அவஸ்தைப்படும் திவ்யமான தாம்பூலம் காரணமாக கீழ் அலகு அசைய, கழுத்தில் தொங்கும் தங்க அட்சரக்கூடு அசைய, நாலடி உயரம், பொதுநிற மேனி, ஸ்தூல சரீரம், ஐம்பது வயது, உள் வளைந்து, திருநீற்றுக் குறி சாற்றி, புனிதமான பொட்டிட்டு, முக மலர்ந்து, முழந்தாளிற்கு மேல் வேட்டிக்கட்டு, அட்சரக் கூட்டிற்கு ஆதாரமான சங்கிலியைக் காட்டி மறைக்கும் அங்க வஸ்திரம், இடது கக்கத்தில் குடை, வலது கையில் வெற்றிலைச் சரை, நாசிகா சூரணப்பட்டை, குறிப்புப் புத்தகம் முதலிய தளபாடங்கள் சகிதம் அசைந்து வருகிறாரே, அவர்தான் ஆறுமுகச் சட்டம்பியார். அவரைப் பார்த்தவுடன் உங்களுக்கு ஒருவேளை சிரிப்பு வரும். எனக்கும் அப்படித்தான்.



பள்ளிக்கூட வாசலில் நடக்கும் கெந்தலடி, கிளிக்கோடு முதலிய விநோத சம்பவங்களிற் கூடாக இவர் வரும்போது ஓர் இருமல், ஒரு செருமல்—அவ்வளவு தான்—காயும் பழமுஞ் சேரும், புறக் கோடுமேறும். சுருங்கச் சொன்னால் அற்புதங்கள் நடைபெறும். சட்டம்பியார் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்ததும், தமிழ்நாட்டு நாவலாசிரியர்கள் விவரிக்கின்ற மாதிரி ''டங், டாங், டங், டாங்'' என்று பெரிய மணி கர்ச்சிக்க, தலைமை உபாத்தியாயர் மேசையிலிருக்கும் கை மணி ''டிங் டிங், டிங் டிங்'' என்று முறை கூறும். சிதறு தேங்காய் பொறுக்கக்கூட இவ்வளவு ஆரவார மேற்படாது! கூட்டிலடைபட்டிருந்த காட்டு மிருகங்களை வெளியே விட்டால் என்ன பதற்றமுண்டாகுமோ அதே பதற்றத்துடன் இவர்கள் எல்லோரும் வெளியிலிருந்து பள்ளிக் கூடத்திற்குள் பறந்தோடுவார்கள். இந்தக் காட்சியை, எங்களூர் ஐயர் பள்ளிக் கூடத்தில், நான் அரிவரி படிக்குங் காலத்தில் ஒவ்வொரு நாள் காலையிலும் பார்த்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் அத்திவாரம் நன்ருக இருக்கவேண்டும். தகுதியுடையதாக இருக்கவேண்டும். தளராததாக இருக்க வேண்டும். இதை மனதில் வைத்துக் கொண்டுதான் போலும் ஆறுமுகச் சட்டம்பியாரை அரிவரி வகுப்பை மேய்க்கும்படி விட்டிருந்தார் தலைமை உபாத்தியாயர். இரண்டாவது மணியடித்ததும், வகுப்பு உபாத்தியாயர்கள் முன் செல்ல, பின்னே கொழுத்தாடு பிடித்துக்கொண்டு நாங்கள் போவோம். அரிவரிப் பிள்ளைகளுக்கு ஆராதனைக்குப் போவதென்ருல் பரம சந்தோஷம். ஏனெனில், ஆராதனை நடப்பது மேல் வகுப்புக் கட்டிடத்தில். மறு நேரங்களில் அங்கு போனுல் மேல் வகுப்பு நாட்டாண்மைக்காரர்கள் எங்களை விரட்டியடிப்பார்கள். இஃது உலகம் முழுவதும் மேல் வகுப்பார் பரம்பரையாகக் கையாண்டுவரும் ஆதிக்கம். அவர்கள் அதையேன் கைவிடவேண்டும்? எமக்குக் கிடைத்த அருந்தருணத்தை நாமுமேன் நழுவவிட வேண்டும்?

இந்த நேரத்திலும் மேல் வகுப்பார் சும்மாவிருக்க மாட்டார்கள். பிறவிக் குணம் பற்றற்றுப் போகாது. கையோங்கி



எங்களில் யாருக்காவது ஒருவருக்கு ஒரு குட்டு விழும். "உபாத்தியா..." என்று கதறுமுன், "நமப்பார் பதீபதே-அரஹர மஹா தேவா", தேவாரம், நல்லொழுக்கம், சுகாதாரம், தேகாப்பியாசம், கல்வி என்னும் பொருள்கள் பற்றிப் பிரசங்கம்; திரும்பவும் பட்டியைச் சாய்த்துக் கொண்டு வகுப்பு உபாத்தியாயர்கள் செல்வார்கள். எல்லோரும் வகுப்புகளில் உட்கார்ந்தவுடன் கலகலவென்ற தொனியுடன் தையலம்மா வழிகாட்ட, சண்டைப்பட்டாளம் அணிவகுத்து தன் வகுப்பில் நுழையும். இந்த நாரீமணிகள் ஏன் கடைசியாக வருகிருர்கள் தெரியுமா? ஆண்களைக் கண்டால் வெட்கமாம். "என்ன அரிவரிப் பிள்ளைகளைப் பார்த்தாலுமா? வெட்கம்...அரிவரிப் பிள்ளைகளென்ருல் என்ன வேறு சாதியா?" என்று துடி துடிக்கிருள் இப்பொழுது என் பக்கத்திலிருக்கும் மனைவி. கலிகாலமே!

வகுப்புத் தொடங்கியதும் முன்தினம் வராதவர்களை விசாரித்துப் போதுமான பதில் கிடைக்காவிட்டால், ஆறுமுகச் சட்டம்பியார் ஆக்கினைக்குள்ளாக்குவார். பலவிதமான சாட்டுகள் பிறக்கும். முக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியமாக வயிற்றுவலி, தலையிடி. 'அப்பு' என்னுடைய வேஷ்டியைப் போர்த்திக் கொண்டு எங்கோ போய்விட்டார், 'ஆச்சி' அடுத்த வீட்டு மனுஷியோடு அலட்டிவிட்டு அடுப்புப் பற்றவைக்க அயர்ந்து போனுள் என்று, தினிசு தினி சாக வரும். அதற்குப்பின் மடி சோதனே. எங்கள் மடிகளுக்குள் இருக்கும் கொய்யாப் பழம், இனிப்பு, நெல்லிக்காய், புளியம்பழம், இலந்தைக்காய், பனங் குருத்துப் போன்ற போஜன திரவியங்களே இறக்குமதி செய்து, ஒவ்வொன்றையும் கயிற்றுத் துண்டுகளில் கோத்து, சொந்தக்காரரின் கழுத்தில் மாலேயாகப் போடுவார் எங்கள் சட்டம்பியார். ஒன்பது மணிக்குப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும். ஒரு மணிக்கு விடும். இப்பொழுது பதினென்று தானே, விடுதலே கிடைக்க இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் உள. காலச்சக்கரம் மனவேகமாகச் சுழலுகின்றது. பத்தடி நீளம் எட்டடி அகலமுள்ள பெரிய அரிவரிப் படமொன்றை எட்டிச் சுவரில் மாட்டுவாராஞல், ஆறுமுகச் சட்டம்பியார் பிள்ளேகளுடன் போர்தொடுத்து விட்டாரென்பதற்கு அறிகுறி. கையில் பிரம்பை எடுத்து ''அ'' வைத்



தொட்டு ''ஆஞ'' என்று முழங்குவாராகில், பின் வாங்கிலே நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருக்கும் சில பாலர்கள் திடுக்கிட்டெழுந்து குடைகளே எடுத்து விரிப்பார்கள். அவர் ''ஆஞ'' என்றதுதான் தாமதம், நாங்களெல்லோரும் ''ஆஞ'' என்று ராகம் பாடுவோம். இதில் சுருதி வித்தியாசம், தாள வித்தியாசம் எல்லாம் கலக்கும். இப்படியாக ''அ'' தொடக்கம் ''ஐ'' வரை கிரமமான முறையில் நடக்கும். அரைக் கண் பார்வையுடன் சட்டம்பியாரின் கைதளர ''கீ'' வரை போகும். அதற்கப்புறம் ''கு''வந்ததும் பிரம்பு எங்கேயோ போய் ''லெ''யில் சுட்டிக் காட்டும்; சட்டம்பியார் குறட்டைவிடத் தொடங்கி விடுவார். இதுதான் சமயமென்று கழுத்தில் தொங்கியிருந்த உணவுப் பொருட்களெல்லாம் அவரவர்கள் வாயில் நுழையும் அமைதி எங்கும் நிலவும்.

பள்ளிக்கூடம் விட்டதும் யார் யாருடைய வீட்டு மரத்திலேறுவது, எந்தப் புளியமரத்திற்குக் கல்லெறிவது என்று ''புரேகிராம்'' போடத் தொடங்கி, குஸ்தி, மல்யுத்தம் முதலிய தேகப்பயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இறங்கினுலும் இறங்கி விடுவோம். சமயம் பார்த்து ஆறுமுகச் சட்டம்பியாரும் கண்விழித்து, குதித்தெழுந்து, யாராவது ஒருவனுக்கு முதுகில் இரண்டுவாட்டு வாட்டி விட்டுத் திரும்பவும் ''அ'' என்று இரைவார். நாங்களும் கரைவோம். இவ்வாருக, புகுவதற்கு இடமில்லாமல் சட்டம்பியாருக்கும் எங்களுக்கு மிடையில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து கொண்டிருக்கும் அரிச்சுவடி ''கு'' வந்ததும் சட்டம்பியார் பழையபடி ஏட்டைக் கட்டி விடுவார். ''டங்'' என்று ஒருமணி அடிக்கும். ''நமஸ்காரம் உபாத்தியாயர்'' என்று கூறியதும் கூருததுமாக ஒருவர் மேல் ஒருவர் வீழ்ந்தடித்துக்கொண்டு கம்பி நீட்டி விடுவோம்.

ஒரு வருஷ முழுவதும் ''கீ''யுடன் பாடம் முடிந்துவிடும். பரீட்சைத் தினமும் நெருங்கிவிடும். ஏன்... பரீட்சைத் தினமும் வந்துவிட்டது. கோடி வேஷ்டி, கோடிச் சட்டை, கோடிச் சால்வை அணிந்து, கைகளுக்குக் காப்புப் பூட்டி, நகங்களெல்லாம் வெட்டி, முகம் சுத்தி செய்து, ''பௌடர்''பூசி கறுப்புப் பொட்டிட்டு, எண்ணெய் ஒழுக வைத்துத் தலை



வாரி, ஒரு கையில் ஏட்டுக்கட்டு, மறு கையில் தேங்காயும் கற்பூரமும் கொண்டு, காலை ஆறு மணிக்கே ஆகாரம் முடித்துக் கொண்டு, உல்லாசமாக, இருதயம் படபடக்க, கை கால் நடுநடுங்க, தாய் தந்தையரின் ஆசீர்வாதம் பெற்று வீட்டை விட்டு வெளிக் கிளம்புவோம். முதல் வருகிற பிள்ளையார் கோவிலில் கற்பூரம் 'கொளுத்தி', ''பிள்ளையாரே, சோதனை 'பாஸ்' பண்ணச் செய்துபோடும்''என்று பிரார்த்தித்துக் கொண்டு தேங்காயையும் உடைத்து பிரசாதமும் உண்டு பள்ளிக் கூடம் சேர்வோம்.

அமர்க்களம், ஆரவாரம். ஆறுமுகச் சட்டம்பியார் காட்சியளிக்கிருர். தினசரி அணிந்து வரும் உடைதான். ஆனுல் சில மாறுதல்களும் உண்டு. நீட்டுக் கைச் சட்டை—அவர் கையிலும் பார்க்கச் சட்டையின் கை நீளம்; மூக்கில் கண்ணுடி—கண்ணுடி விளிம்புக்கு மேலாக ஏறிட்டுப் பார்க்கும் ராச முளி; சட்டைப் பையில் 'பௌண்டின்' பேனு—அதிலிருந்து ஒழுகிய மை மூன்று சதுர அங்குலம் வரை அலங்கரித்திருக்கிறது அவரது சட்டையை. அவரதைக் கவனிக்கவில்லை. மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையுங் கண்ணுமாக விசிக்கி நடக்கிற சட்டம்பியாருக்கு கண் தெரிந்தால் தானே!

தலைப்பாகை, மேற் சட்டை, காற் சட்டை முதலிய பயங்கர உடை அணிந்து பரிசோதகர் வந்தார். எங்கள் வகுப்பில் நுழைந்ததும், நாங்கள் எல்லோரும் எழுந்து கைகூப்பி ''நமஸ்காரம் ஐயா!'' என்று ஒரே காலத்தில் வரவேற்றோம். இதைச் சரியாகச் செய்யப் பயில்வதற்கு எங்களில் எத்தனை பேர்களின் முதுகுத் தோல் உரிந்திருக்குமோ, மேலே இருக்கிறவனுக்குத்தான் தெரியும். அவதி அவதியாக ஆறுமுகச் சட்டம்பியார் மூலையிலிருந்த வாழைத் தடற் சுருளை அவிழ்த்து, பரிசோதகர் கழுத்தில் சாற்றினார் மல்லிகையும் அலரியும் கலந்த ஒரு பூமாலையை. புன்முறுவல் பூத்த முகத்தினராய் நெடுநாட் பழகிய நண்பர்கள்போல் சேமம், நாட்டு நடப்பு முதலியவைகளைப் பற்றிச் சிறிது நேரம் விழுந்து விழுந்து பேசினார்கள்.

மேசை மேலிருந்த கம்பொன்றை எடுத்து, பரிசோதகர் ''உ''வைக் காட்டி,



மற்றக்கைச்சுட்டு விரலினால் நரசிங்கனைக் காட்டினார். நரசிங்கன் ''உ'' என்று கத்தினான். ஏதோ சட்டம்பியார் கொடுத்துவைத்த பாக்கியம் இன்னும் பரிசோதகர் ''கீ''வுக்குக் கீழ் இறங்கவில்லை. கம்பு கீழே வந்து எதையோ காட்டிற்று. சுட்டுவிரல் மாணிக்கத்தை நோக்கிற்று; மாணிக்கத்தின் 'முழி' புரளத் தொடங்கி விட்டது. சட்டம்பியார் பரிசோதகருக்குப் பின்னால் நின்றுகொண்டு ஏதோவெல்லாம் கையை நெளித்துக் காட்டினார். சட்டம்பியார் பரிசோதகரை நையாண்டி பண்ணுகிறார் என்று மாணிக்கம் நினைத்து, வந்த சிரிப்பைக் கையாலடக்கினான். பொங்கிவிட்டது கோபம் சட்டம்பியாருக்கு. சந்நதம் போட்டுக் கொண்டு ''சொல்லடா 'ஞை' சொல்லு'' என்றார். மாணிக்கம் 'ஞை' என்றான்.

இப்படியாகத் தள்ளுப்பட்டு இழுபட்டு அரிவரி வகுப்பில் படித்த அறுபத்து மூவரில் நால்வர்தவிர மற்றைய அனைவரையும் அடுத்த வாரமே முதலாம் வகுப்புக்கு வந்திருக்குமாறு தலைமை உபாத்தியாயர் அழைப்புப் பத்திரம் அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார், அச்சுபதினத்திலன்றே ஆறுமுகச் சட்டம்பியாரை நாம் விட்டுப் பிரிந்தோம். இவ்வளவு பிள்ளைகளும் எப்படி ''பாஸ்'' பண்ணினோமென்று எனக்கு இன்றுந்தான் ஆச்சரியமாயிருக்கின்றது. பூமாலையோ, சட்டம்பியாரின் வசீகர முகமோ அறிகிலேன். பழங்காலத்துப் படிப்பு அப்படியுமிப்படியுந்தான் என்று இக்காலத்து மாணவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். பழங் காலத்திலே நால்வரையாவதுநிறுத்திவைத்தார்களே...

குறிப்பு: காலையில் வயிறு நிரம்ப உண்ணும் பழஞ்சாதமும் புளிச்சல் கறியும் தான் ஆறுமுகச் சட்டம்பியாரின் தூக்கத்திற்குக் காரணம் என்று எங்கள் பலரின் பலநாளைய கூட்டபிப்பிராயமாகும்!

*



ஏறு நடையோடு வரும் ஆறுமுகம் என்றே.

# மரியாதை எதற்கு?

ஆமாம்! இந்தத் தலையங்கத்தைப் பார்த்தவுடன், தற்கால இளைஞர்களுக்கெல்லாம் மரியாதைப் பழக்கங்கள் கொஞ்சமேனும் இல்லையென்றுதான் கட்டாயம் முறுகுவார்கள்—'யார் முறுகுவார்கள்?' கிழவர்கள்! அஃதேனென்றால்—ஒன்று, கிழவர்களைக் கண்டால் நாற்காலியைவிட்டு எழுந்து மரியாதையாக வாய் பொத்தி, கைகட்டிநிற்கவில்லை. இரண்டு, பெண்கள் வந்தால் எழுந்து நின்று அவர்கள் சொன்ன ஏவல்களைப் புரியாமல் நிற்பது. மூன்று, வாயில் சுருட்டுடன் கதாப்பிரசங்கம் செய்வது. கிழவர்கள் முட்டாள்களிடம் அகப்பட்டு சந்தோஷமாக கஷ்டப்படுவதுபோல, இளைஞர்கள் அகப்படுவதில்லையே. ஏன்? அவர்கள்தாம் சர்வ முட்டாள்களாச்சே!

ஆனால், ''வில்லியம் ஒவ் விக்காம்'' என்பவர், ''பழக்கங்கள்தான் ஒருமனிதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குகின்றன'' என்று சொல்லும்பொழுது, இதைத்தான் கருதினுரோ தெரியாது. அப்படி இதைக் கருதாவிட்டால், ஒருகால் அவர் மனதில் வேறு ஏதாவது வைத்திருப்பார்; பரிதாபம், சகோதர அன்பு அல்லது இந்த வகையில் ஏதாவது சரக்குகள் வைத்திருந்திருப்பார்.

வயதிற்குத் தகுந்த மரியாதையா, அறிவிற்கேற்ற மரியாதையா தேவை என்பதுதான் இளைஞர்களின் சந்தேகம்!

அரசியல் விஷயங்களிலும், கந்தோர் விஷயங்களிலும் ஒரு மாதிரியான மரியாதை இருக்கத்தான்வேண்டும். ஆனுல், எல்லோரும் ஒருவிதமான பிரவேசக் கட்டணங் கொடுத்து, சுயமரியாதையுடன் சினிமாக் கொட்டகையில் படம் பார்க்குஞ் சமயத்தில் — கிழவனுர், பெரியவர், பெண்மணி, அல்லது வேறு யாராகத்தானிருக்கட்டும் — வந்து விட்டாரென்று எழுந்து உட்கார்ந்திருந்த நாற்காலியை அவருக்குக் கொடுப்பானேன்? பலஹீனர்களென்ருல் கொடுக்கத்தான்வேண்டும். அப்படிக் கொடுத்தா



லும் இதற்காக நன்றி பாராட்டுபவர்கள் எத்தனை பேர்? வயதின் முதிர்ச்சிதான் இதற்குக் காரணம் என்று தீர்மானித்துவிட்டு 'கம்'மென்று சும்மா இருந்துவிடுவார்கள். மடத்தனமாக உளறுவேனேயாகில்—அவர்கள் நிரம்பவும் சரி. ஒருவரிலும் பார்க்க இன்னெருவர் இருபது வயதாலே கூடியவர் என்ற ஒரு சிறு போலி நியாயத்தைக் கொண்டு, அவருடைய மரியாதைக்கோ, நாற்காலிக்கோ மற்றவர் உரித்தாளியல்லர்; மூடத்தனத்திலும் பார்க்க, அறியாமைக்கே வயதும் மரியாதையுங்கூட.

பெண்பிள்ளைகள் மரியாதைக் குரியவர்கள்தாம். ஏனென்ருல், எங்கள் சாதி யாருடையதாய்கள், பத்துமாதம்நொந்து சுமந்து பெற்றவர்கள்; அவர்களில்லாவிடில் நாங்கள் எங்கே? ஆனுல், இளைஞர்களின் பழக்க வழக்கங்களைக் குறித்து, கோள் சொல்லும் பெண்களில் எத்தனை பேர்கள் உண்மையில் தாய்மார்கள்? ஒரு பெண், அல்லது எந்தப் பெண்ணுவது வரும் பொழுதெல்லாம், ஓர் இளைஞன் எதற்காக எழுந்திருக்கவேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களோ பகல் முழுவதும் வீட்டிலேயே இருந்து சுகமாகக் காலங் கழித்துவிட்டு வெளியே உலாவ வரும்பொழுதெல்லாம்—ஒரு நாளைக் கொன்பது தரமாவது ஒரே பாதையைத் திருப்பித் திருப்பி அளந்து பார்த்துவிட்டு, அல்லது கந்தோரில் தன் கடமை பார்த்துக் கஷ்டப்பட்டு உழைத்து ஆறுதலாய் உட்காருவோம் என்ற ஆலோசனையுடன் சற்றே இளைப்பாறியிருக்கும் இளைஞன் எழுந்திருக்க முடியுமா? சற்று யோசித்துச் சொல்லுங்கள்.

ஓர் இளைஞன் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளாமல் வாயில் ஒரு சிகரெட்டுடன் போனால், சுருட்டுக்கு மேல் சுருட்டடிக்கும் கிழவனுருக்கு ஏன்கோபம் வரவேண்டும்? அதுதான் முறை ... தம்பி, சரியான முறை! உண்மையில், வேஷ்டியை மடித்துக் கட்டி முழங்கால் தெரிய நடக்கும் பையனைப் பார்த்து, முதுகு தெரிய ரவிக்கை போட்டு மார்பு தெரிய சேலை கட்டிய பெண் அதிசயப்பட்டு, ஏங்கி அறிவுகெட்டு விழுந்தாளாம்!

பெண்களின் மரியாதையைக் காப்பாற்றவாவது ஆண்கள் பொய் பேசாது;



அழகாக உடுத்தி, நேர்மையாக நடக்க எத்தனிக்கவேண்டும். ஆனால், உண்மையில் மனதிற்குள் அடங்கியிருக்கும் கொள்கையின் வெளி அம்சங்களைக் காட்டுவதற்காகவா இச் செயல்களை ஆண்கள் செய்ய வேண்டும்?

நல்ல பழக்கங்களின் ஆதாரயாக, மற்றவர்களுக்கு ஒரு யோசனை: பலஹீனர்ளுக்குஞ் சரி, எளியவர்களுக்குஞ்சரி, வெட்கப்படுகிறவர்களுக்குஞ் சரி—நம்முடைய அடிமைப் புத்தியை இப்படி உரிந்து காட்டுவது சரியல்ல. இதுதான் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும்.

வேட்டியை மடித்துக் கட்டினால் முட்டுக் கால்கள்தான் தெரியும்; ஆனால் கெட்ட இருதயத்தைக் காட்டிக்கொடுக்கவில்லையே. நேர்மையான குணதிசயங்களுடன், வெளியிடங்களில் மற்றவர்கள் கவனிக்கும்பொழுது பெண்களுடன் மரியாதையாக நடப்பவன், தன் மனைவியையும், மகளையும் தனியிடத்தில்வைத்து திட்டி உதைக்கவில்லையா? எல்லோரையுங் கனம் பண்ணி, ஒருவர் சொல்லையும் தட்டிப் பேசாமல் நடக்கும் ஒருவன், தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையாட்களையும் ஏவலாளர்களையும் துன்பப்படுத்துவதில்லையா?

ஒவ்வொருவரின் தராதரங்களையும் பார்த்து அதற்கேற்ற மரியாதை செய்ய வேண்டுமானால், அதற்காகப் பிறக்க வேண்டுமென்றே நான் சொல்லுவேன்.

இளைஞர்கள் தங்கள் நினைவுகளை வெளிப்படுத்தக் கொஞ்சம் கடூரமான சொற்களைத்தான் உபயோகிப்பார்கள். பழைய காலங்களில் நடந்தமாதிரி கிரியைகளுக்கும், உபசாரங்களுக்கும் பயந்து பின் நிற்பவர்கள் அல்லர். ஆகையால் தான் இவர்களை 'வம்பன்கள்' என்றழைப்பார்கள்—யார்? கிழவர்கள்!

ஒரு கிழவன் ஆற்றில் குளிக்கும்பொழுது உண்மையில் நீந்தத் தெரியாது, அமிழ்ந்து தத்தளிக்கும் பொழுது, ஒரு இளைஞன் அவரைக் காப்பாற்றத் தெண்டித்தால் சந்தோஷப்படுவார். ஆனால், தர்க்கிக்கும் பொழுது மாத்திரம் எதிர்த்து உண்மை நியாயத்தைப்பேசினல் கிழவன் கோபிப்பார். எதற்காக? இளைஞனுக்கு வயது இருபத்தைந்து, கிழவனுக்கு அறுபத்தைந்து! இதுவும் ஒரு சம்பிரதாயம்.



வேஷ்டி நிலத்தைக் கூட்ட, சால்வை பறக்க, வாயில் சிகரெட்டுடன், தலை நிமிர்ந்து நடக்கிறன் ஒரு வாலிபன். கிழவரையும் பெண் சமூகத்தாரையுமே மதிக்கிறனில்லை. அப்படியிருந்தும் பழக்க வழக்கமில்லாத இந்த 'வம்ப'னை அந்தப் பெண் மணக்க ஏன் விரும்புகிறள் என்று எந்தக் கிழவனுக்குத்தான் தெரியும்? மலையேறினல் என்ன, ஆகாய விமானத்தை ஓட்டினலென்ன, நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்தாலென்ன-எல்லாம் செய்வது யார்? துணிவு, தேகக் கட்டு, அழகு, பேச்சுவன்மை எல்லாம் ஒருங்கு சேர்ந்து பொங்கி வழியும் இந்த இளைஞன் தான்!

ஒருவேளை இவர்களுக்குத் தங்கள் தந்தையர்களிலும் பார்க்க மனத்தைரியம் அதிகமாக இருக்கலாம். தீர்மானிக்கு முன் எல்லாவற்றையும் விளங்கும் ஆற்றலுடையவர்களாயிருக்கலாம். தற்காலத்திலும், வழங்கினலொழிய ஐதிகம் என்பது அறவே கிடையாது. அதை வேருடன் அழிக்க விருப்பமுடையவர்களாக யிருக்கிறர்கள். ஒருவன் ஆங்கில பாஷையைப்

பிழையாகப் பேசினுல், நாங்கள் ஏன் அதைப் பின்பற்றுவான்? கசடறப் பேசக் கற்றுக் கொண்டால் என்ன?

ஆலயங்களுக்குள் இருக்கும்போதெல்லாம் பெண்கள் புண்ணியான்மாக்கள் தாம், ஆனுல், வீதியில் வந்தால் மனுஷத் தன்மையுடையவர்கள்தானே? அதற்கு வேறு அபிநயங்கள் ஏன் வேண்டும்? உண்மையில் ஒரு மாது அடிக்கிணற்றில் தான் அடங்கிக் கிடப்பாள். வயதானவர்கள் அந்தக் கிணற்றைச் சுற்றிவர அழகாகக் கட்டி, பொய் என்னும் புறவெள்ளம் உட்செல்லாமல் வெகு கவனமாகப்பேணி வருவார்கள். ஆனுல் இளைஞர்களோ, அவளை வெளியே இழுத்து, என்ன சேலை கட்டியிருக்கிருள், சுத்தப் பட்டோ அல்லது ''இமிற்றேஷனே?'' பற்கள் உண்மையோ, பொய்ப் பற்களோ? தலைமயிர் இயற்கையோ பொய் முடியோ? என்று அறிய மிக அவாவுடையவர்களாயிருப்பார்கள். இளைஞர்களுக்கு மூத்தோர்கள் தங்களிலும் பார்க்க விவேகமுடையவர்கள் என்ற நம்பிக்கையே கிடையாது. உண்மையைக் கூறுமிடத்து அவர்கள் ஏன் நம்பவேண்டும்? எப்படி நம்ப இயலும்?



பழக்கங்கள்தான் ஒரு மனிதனை ஆக்குகின்றன—வெள்ளை வேஷ்டி, சரிகைச் சால்வை. ஆம், ஆம். நீங்கள் சொல்வதுதான் சரி. நீங்கள் செய்வதெல்லாம் எப்பொழுதுஞ் சரி ஏனென்முல் என்னிலும் பார்க்க நீங்கள் வயதிற் பெரியவர். இங்கே நான் சுருட்டுப் புகைக்கலாமோ? 'அம்மணி இப்படிஉட்காருங்கள்' (அந்தப் பெண்மணி ஏன் வாய் திறவாது எங்களையெல்லாம் இப்படி ஏமாறவிட்டு நிற்கிருள்?) ஓஹோ வெட்கம். சீ, இல்லை அகங்காரம்! இதற்குப் பெரியோர்கள் கையாளும் முறையொன்றுண்டு. அஃது என்னவென்று என்னை நீங்கள் அகங்காரத்துடன் கேட்பீர்கள். நானும் மரியாதையாக இதோ பதிலுரைக்கிறேன். கபடநிலை, மாய்மாலங்கள், பொய்யாசாரங்கள் முதலிய தெய்வங்களை வணங்குதலே.

இளைஞர்கள் இவ்வகையான தெய்வ வழிபாடுகளை நன்ருய் அறியவில்லை. இவ்வகையான குருட்டு நம்பிக்கைகளை உதறித் தள்ளிவிட்டார்கள். இன்னுமென்ன

வென்றுதான் அறிய விருப்பமுடையவர்கள். ஆசாரம், வழக்கம் என்னும் வனத்தை வெட்டி, வளர்ச்சி என்னும் பாதையை உண்டாக்குபவர்கள்,இந்தக் கிரியை-அந்த நியாயக் கருமங்களைச் செய்வதனுல் என்ன நன்மை வருமென்று ஆராய்பவர்கள்-எல்லா நேரத்திலும் ஏனென்று கேட்டுக்கொண்டேயிருப்பார்கள்.

பழக்க வழக்கந் தெரியாத 'வம்பன்' அப்படித்தான் இவன் தகப்பனை, அவர் தகப்பனுர் சொன்னுர்!

*



ஆண்கொண்டை. பெண் [illegible]ண்டை. மரியா[illegible]

# தமிழ் அறியாப் பெருமான்

"யமதர்ம ராசனே! இவன் தயவு தாட்சண்யமில்லாத கொடூர குரூபி. இவன் கன்றுக் குட்டியைப் பாலூட்ட விடாமல், கறந்த பாலைத் தண்ணீருடன் கலந்து, பாலென்று சனத்தை ஏமாற்றி, அதனை விற்ற படுபாவி" என்று கூறினுன் யமதூதன்.

''பாதகன். தூதர்காள்! இவனை முள்ளுக் கம்பிகளினுற் சுற்றிக் கட்டிப் பசியால் வாடி வதங்கியிருக்கும் என் கழுகுகளுக்கு இரையாக்குங்கள்'' என்று யமதர்மராஜன் கர்ச்சிக்க, மந்திரி இருந்த ஆசனத்தை விட்டெழுந்து, ''மஹாராஜ்! எங்களிடமிருந்த முள்ளுக் கம்பிகளெல்லாம் குள்ளரக்கன் வாயினின்றும் எங்கள் நாட்டைக் காப்பாற்றுவதற்காக யுத்த சேவையிலீடுபட்டிருக்கின்றன" என்று தெரிவித்தான்.

''எவ்விதத்திலாவது இவனைக் கட்டியி ழுத்துக்கழுகுகளுக்கு இரையாக்குங்கள்.'' மறுபக்கந் திரும்பி, ''யார் இந்த மகான்? இவரை எதற்காக இங்கு கொண்டு வந்தீர்கள்?'' என்று வெகு பணிவுடன்யம தர்மராசன் வினவ, ''சுவாமி! நீங்களும் இந்த வெளி வேஷத்தை மென்று விழுங்கி விட்டீர்களோ என்பதை நினைக்க எனக் குச் சிரிப்பாயிருக்கிறது. ஜீரணமாகாது. கக்கிவிடுங்கள்'' என்று சித்திர புத்திரன் சிரித்தவண்ணமே, ''இவன் மகான் அல் லன். தமிழ் நாட்டிலே,தமிழ்ப் பெற்ருேர் செய்த தவப்பயனுல் பிறந்து, தமிழ் தெரி யாதென்று வீரமுழக்கஞ் செய்த தமி ழன்'' என்று கூறினன்.

மகாராசன் உடனே தனது வெண் பற்களை நெருமி ''உண்மைதானு? ஆஹா! இவனை என்ன செய்வது என்று தெரிய வில்லையே! தேசத் துரோகி! புரியாப் பாஷையில் பேசுகிறவன் எங்களைப்பற்றி என்னென்ன தகவல்கள் எதிரிக்குக் கொ டுப்பானே? இவனை இத்தேசத்தில் நின் றும் துரத்திவிட வேண்டும். எங்கேயனுப் பலாம்? அந்தமா...இல்லை. என்னையும் ஏமாற்றத் துணிந்தவனல்லவா? இவன்



கர்வந்தான் என்னை? இவனை இங்கேயே வைத்துச் சித்திரவதை செய்யவேண்டும். என் கண் முன்னேயே செய்யவேண்டும்'' என்று ஆசனத்தை விட்டிறங்கி, தமிழ் தெரியாத் தமிழனை அணுகி,அவன் காதை முறுக்குவதற்காகக் கையை நீட்டினன்.

'சீ இவனைத் தீண்டுவதும் பாவம்' என்று முன் யோசனையுடன் பின்வாங்கி, ''இவனுக்குப் பிராயச் சித்தம் செய்ய வேண்டும். தண்ணீர்க் குழாயைத் திறந்து அதன்கீழ் இவனை மூன்று கிழமை இருத் துங்கள். மற்றைய அலுவல்களைப் பின்பு யோசிப்போம்'' என்று கதறினன்.

'தமிழனுக்குச் சித்திரவதை', 'தமிழ் தெரியாத் தமிழன்', 'சித்திரபுத்திரனர் சிரிப்பு' என்ற தலையங்கங்களுடன் வெளி வந்தன, தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம்! ஒரே கலவரம். பத்திரிகைக் காரர்களுக்குக் குதூகலிப்பு. எந்தத் தமி ழன் கையிலும் ஒரு பத்திரிகை. யமலோ கத்து நடப்புப் பற்றியே தமிழ் நாடெங் கும் பேச்சு. இவ்வுலக சீவியத்தில் தண் டனை கிடைக்காவிட்டாலும், யமலோ கத்திலாவது கிடைத்ததே என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கோர் ஆறுதல். தமிழ் தெரியா மற்றும் தமிழருக்குத் தமிழ்ப் பத்திரிகைகள்மீது அருவருப்பு. தமிழ்ப்பத்திரிகைகள் வாசிப்போர்மீது ஒரு வெறுப்பு. தமிழ்ப்பத்திரிகைகளுக்கு எழுதுவோரைக் கண்டால் குறுகுறுப்பு, ஒரு மாதமாக இதே முழக்கம். தினசரிகள், வாரப் பதிப்புகள் எல்லாம் இந்தத் தேசத் துரோகியைப் பற்றியே 'கொலம்'கள்! அச்சு எந்திரங்களுக்கு ஓய்வில்லா ஓட்டம். காய்ந்து கிடந்த பத்திரிகைகள் குளிர்ந்தன. குளிர்ந்திருந்த பத்திரிகைகள் மிளிர்ந்தன.

'இதுவும் வேண்டும் இன்னமும்வேண்டும்' என்று தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் வந்து குவிந்தன. மறுப்புக் கடிதங்கள் (தமிழ்த் தெரியாத் தமிழரால் எழுதப் பெற்றவை) புரியாப் பாஷைப் பத்திரிகைகளில் வெளியாயின. இப் பத்திரிகைகளை ஆதரிப்பவர்களுக்குத் தமிழ் நாட்டு விவகாரங்களில் அவ்வளவு அக்கறையில்லை. அக்கடிதங்கள் சுய சுகத்திற்காகவே பிரசுரமாகின்றன. ஆகையால் யமலோக சேமலாபங்களை அறிய விரும்பிய சில தமிழ் தெரியாத் தமிழன்பர்கள் இப் பத்திரிகைகளைக் கக்கத்தில் செருகிக் கொண்டு'இதற்கென்ன செய்யவேண்டும்' என்று இரகசியக் கூட்டங்கள் கூடினர். பத்திரிகைகளில் இச் செய்திகள் வெளி வராத வண்ணம், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளும் கைக் கொள்ளப்பட்டன.



யமலோக அதிபன் விதித்த தண்டனையைக் கண்டித்துக் கண்டனக் கூட்டங்கள் கூடின. 'பெட்டிசங்கள்' பறந்தன! வழக்கமான முறையில் பதிலும் கிடைத்தது. தமிழ் தெரியாத் தமிழருக்கு வயிறு பற்றி எரிந்தது. என்ன செய்யலாம்? யாருக்கு முறையிடலாம்? சிறுபான்மைக் கட்சி என்றாலும் புத்தியில் குறைபட்டவர்களா! 'மற்றைய தமிழர்கள் தங்களுடன் ஒத்துழைக்க விரும்புகிறவர்கள் இல்லை' என்று ஒரு வெறும்புகாரைக் கிளப்பினர். செவிசாய்ப்பார் யாருமில்லை.

தூது கோஷ்டி யொன்றைத் திரட்டிப் பெரியார்களுக்கு 'முறை'யிட்டனர். ஒன்றும் பலிக்கவில்லை. சரி, இதைத் தீர்க்க ஒரேயொரு மார்க்கம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சும்மா விடுவோமா?' என்ற சுலோகத்தை உச்சரித்துக் கொண்டு புரியாப் பாஷை பேசும் பெரியோரை வேண்டினர். அவர்களும் தக்க சமயமிதுதான் என்று பக்கக் கிட்டியில் எட்டிப் பிடித்தார்கள். மாடுகளும் அவர்கள் பக்கம் இழுத்தன. அவர்கள் காரியமும் பலித்தது. இவர்கள் வேகமும் குறைந்தது.

யமலோகப் பிரச்சினையை முற்றும் விபரமாக விசாரித்து உலகிற்கு விரிவாக விளக்க ஒரு விசாரணைச் சபை ஏற்படுத்தி, குற்றவாளியையும் 'சாய்த்து'க் கொண்டு தமிழ் நாடு வந்து சேர வேண்டுமென்று யமதர்மராஜனுக்குக் கட்டளையனுப்பினர். கட்டளைகளுக்கு அடங்குபவனு யமன்? விண்ணப்பித்தார்கள்......முடியவில்லை. கெஞ்சினுர்கள்...தயவாக வேண்டினுர்கள்......அப்பொழுதுதான் காரியம் பலித்தது.

தென்புல வேந்தன் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்கிருரென்ருல் சொல்லவும் வேண்டுமா? பெரும் ஆரவாரம். 'இவர் ஓர் தேநீர் விருந்து'. 'அவர் ஓர் இராச் சாப்பாடு' இப்படியாக ஏக தடல்புடல்



கள் நடந்தன. யமனுக்கோ ஓய்வில்லை; சபைகளும் சங்கங்களும் புதிதாக முளைத்தன. திறப்பு விழாக்கள்! சமயோசிதப் பேச்சுக்கள்!! 'பிறப்பும் இறப்பும்' பற்றியொரு விசேட சொற் பொழிவு. "ஆஹா!" "யமதர்ம ராஜனுக்கு ஜே!" போன்ற சத்தங்கள் காதைத் துளைத்தன. புகைப் படங்கள் பத்திரிகைகளைச் சோபிதஞ் செய்தன. சுருக்கிச் சொன்னுல், யமதர்மராஜனின் வரவு தமிழ் நாட்டை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

விசாரணை ஆரம்பமாகு முன்னரே யமதர்மராஜன் தனது போக்குவரத்துச் செலவுகளை, விசாரணை முடித்து ஊருக்குத் திரும்புமுன் கொடுக்குமாறு உறுமினுன். முற்பணமாக, மூன்றில் ஒரு பங்கை, விசாரணை ஆரம்பமாகு முன் மேசைமேல் வீசியெறிய வேண்டுமென்று கதறினுர். "கடன் சொல்லவேண்டாம். இந்த நாட்டுக் கணக்குகளைத் தென் புலத்துப் பற்று வரவுடன் சேர்க்கக் கூடாது" என்றும் முன்னறிக்கை செய்தான். இவற்றிற்குத் தகுந்த உத்தரங்கள் கிடைத்ததும் விசாரணைத் திகதி குறிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் வேண்டுகோளுக் கிணங்கி, விசாரணை பகிரங்கமாக வைக்கப்படுமென்று பறைசாற்றப்பட்டது.

தமிழ் நாட்டு மைதானம். 'எக்கச் சக்க'மான கூட்டம். எலும்புருக்கி விருட்சத்தின் கீழ் அமைக்கப் பெற்ற அலங்கார மேடைமீது ஐந்தாறு நாற்காலிகள் 'தூவ'ப்பட்டிருந்தன. பல சாதியினரும், எல்லா மதத்தினரும் பிரசன்னமாயிருந்தனர். படித்துப் பெரிய பதவிகள் வகிக்கும் சிறியவர்கள்; படியாமல் பெரும் பதவிகளைச் சுகிக்கும் பெரியவர்கள்; அப்புக்காத்துமார்; 'மிலிற்றேரி' வேலைக்காரர்கள்; சொந்தப் பாஷையை நேராகப் பேசத் தெரியாதவர்கள்; குடுமியுடைய பெண்கள்; உஷ்ண வாய்வு ஜுரம் நிமித்தம் தலைமயிர் சிதைந்து, பிறகு வளர்ந்த மயிரை மொட்டையடித்துச் சீராக்கிய கட்டழகிகள்; - இவர்களைப்போன்ற பல தினுசான மனிதப் பிராணிகள் வந்து குழுமியிருந்தார்கள். விசாரணை சபைத் தலைவர் மேடைமேல் தோற்றினர். கர கோஷம்.. பரபரப்பு.. சேவகர்கள் புடை சூழ, குற்றவாளி 'நடராச'னகவே வந்து,



மேடைமேல் அவருக்கென்று பிரத்தியேகமாகக் குறித்திருந்த இடத்தில் அமர்ந்தார். காறியுமிழ்தல். கல்லெறி ..எருமைக் கடாவில் யமதர்மராஜன் வந்திறங்கி, அந்நியவுடை தரித்திருந்த சேவகனிடம் கடாவைச் சலக்கரைக்குக் கொண்டேகுமாறு கட்டளையிட்டு, ஒரு காலை மேடைமேல் ஊன்றியதும், சபையிலிருந்து எறிவெடி, பட்டாசு முதலிய உள்நாட்டு வாணங்களின் பேரொலி கிழம்பியது. உடனே, அவசர கால அடக்குமுறைச் சட்டம் வாசிக்கப்பட்டது. எங்கும் நிசப்தம் நிலவியது.

நாம் கண்டறியாத பக்கவாத்திய சகிதமாக, எங்களுக்குப் புரியாத பாஷையில் 'ஒன்று' வந்து பாமாலை பாடிற்று. (குறை நினைக்க வேண்டாம். ஆணோ பெண்ணோ என்று மதிப்பிடச் சக்தியென்னிடமில்லாதபடியால்தான் இவ்விதம் குறிப்பிட நேர்ந்தது. மன்னிக்கவும்.) அதற்குத் பின் 'இரண்டு' வந்து யமதர்மனுக்கும் தலைவருக்கும் பூமாலைகள் சூட்டின விசாரணை தமிழில் நடக்கவிருந்தது. குற்றவாளிக்கு இது புரியாத பாஷை

யாகையால் 'தொலுக்கு'க்கும் துவிபாஷ கர் ஒருவரைச் சேகரித்து வைத்திருந் தார்கள். அப்பாடா! விசாரணை ஆரம்ப மாயிற்று.

தலைவர்: உனக்குத் தமிழ் தெரியாதென் பது உண்மைதானா?

குற்றவாளி: ஆம்.

சபையோர்: வெட்கம் — வெட்கம்!!

தலை: (மேசைமேல் கையால் தட்டி) உனது தாயார் எங்கே?

குற்ற: தயார் என்பது யாது?

தலை: உன்னைச் சிறுவயதில் பாலூட்டி, தலைக்கெண்ணெய் வைத்து, உன்னை முத்த மிட்டு வளர்த்த மிருகம்.

குற்ற: அது ஒரு சிங்கள 'ஆயா!'

யமன்: மெச்சினேன்.

(சபையோர் சிரிப்பாரவாரத்துடன் 'சீக் காய்' வலிக்கிறார்கள்.)

தலை: சரி, உனது தகப்பன்?

குற்: அதன் அர்த்தம்?

தலை: உன்னை இந்தச் சீர்கேடான நிலைக்



குக் கொண்டு வந்த அற்ப பிராணி. அதா வது, உனக்கும் உன் தாயார் அவர் களுக்கும் தேவையான சகல பாக்கியங் களையும் குறைவில்லாமல் பாதுகாப் பதற்கு வருந்தி உழைத்த பாவி.

குற்: அது இருந்ததென்று தான் சொல் லிக் கொண்டார்கள். காலையில் விழிக்கு முன்னர், அது வெளிக் கிளம்பி, நான் தூங் கிய பின்னர் வீடு திரும்பிய அதுதானே! அதை எனக்குத் தெரியாது.

தலை: மிகவும் நன்று. சபையோர்களே! நான் பார்க்குமளவில், இவன் மேல் குற்ற மில்லை. பெற்றோரை இன்னாரென்று அறி யாத இந்த மூடன் மேல், தாய்ப்பாஷை தெரியாதென்ற குற்றத்தைச் சுமத் தினால், அப்பாவம் எங்களைச் சார்ந்த தாகும். யமதர்மராஜனே! இதற்கேதும் வழிவகைகளுண்டா?

யம: அடிப்படையிலிருக்கும் மூலகாரணங் களைக் கிளறப் போனால் மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். எங்கள் நாட்டிற்கே கௌரவக் குறைவு வேண்டாம். இவனுக் குத் தக்க புத்திமதிகள் கூறி, இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காலம் தமிழ் நாட்டிலே விட்டு, நல்ல பழக்க வழக்கங்களையும் பழக்கித் திருத்த வேண்டுமென்பதே எனது அவா.

எல்லோரும் ஏகமனதாய் வாக்குக் கொடுத்ததின் பின் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

*



[illegible]ரியார் [illegible]னுக்கு அருள் புரிந்த பெருமகனார்...

# மேல் ஸ்தாயி

உலகத்தில் மகத்தான பதவியடைய, அவ்வாறு பிறக்கவேண்டும். இதற்காகச் சோர்வடைய வேண்டாம். ஏதோ இந்த நவநாகரிக காலத்தில் சில 'தந்திர'ங் களைக் கையாண்டு மகா மேன்மையான பதவியை அடையலாம். இந்தத் தந்தி ரங்கள் இலேசான சில விதிமுறைகளைக் கொண்டவை. செலவுச் சுருக்கமானவை என்பதுடன் உத்தரவாதமானவை. இவை, பட்டணத்துப் பேர்வழிகள் பல ரால் கையாளப்பட்டு, பெரும் பலனளித் தவை. இதோ அவை: முதன் முதலாக நீங்கள் ஒரு பெரிய ஐஸ்வரியவானென்று உலகத்தார் மதிக்கத் தக்கதாக நடந்து கொள்ள வேண்டும். பூநகரியில் பூந் தோட்டம், தென்னைமரத்தடியில் தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னந் தோட்டம், கள்ளவெட்டியில் காணி பூமி இருப்பதாக உங்களுடைய உற்ற நண்பர்களைக் கொண்டு (யாராவது இருந்தால்) பிரசித்தம் செய்ய வேண்டும். இந்த ஐஸ்வரியம், உங்களுடைய பேச்சு, சிரிப்பு, நடை, உடை, பாவனை முதலியவற்றில் தளம்ப வேண்டும். வீட்டிற்குள் என்ன தான் அணிந்திருந்தாலும், வெளியில் உலாவும் போது கட்டுவதற்கு ஒரு பட்டு வேஷ்டியாவது வைத்திருக்க வேண்டும். இந்த வேஷ்டியைத் தினசரி படுக்கைக்குப் போகும் போது, பவுத்திரமாக மடித்து தலையணையின் கீழ் வைத்துக் கொண்டு படுத்தால், துணி சுருங்காமல், வண்ணான் செலவு சுருங்கி வரும். தெண்டித்து வண்ணானுக்கு வேலை கொடுக்கப்படாது. அப்படியில்லையென்று வேலை கொடுத்தாலும், பணம் கொடுக்கப் படாது. புகைப் படங்களுக்கு நிற்பதற்கும், முக்கிய கூட்டங்களுக்குச் செல்வற்கும் காற்சட்டை, கோட், முக்கியமாகத் தலைப்பாகை முதலியன தேவை. அவற்றை அடிப் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.



இப்படியான இடங்களில் பேசச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால், அதைவிடத் திவ்வியமானது வேறில்லை. உடனே அதைப் பத்திரிகைகளில் போடும்படி செய்யவேண்டும். இது வெகு சுலபம். இந்தக் 'கூப்பன்' காலங்களில் என்னைப் போல் எத்தனையோ பத்திரிகை நிருபர்கள் பட்டினியாக — சாதமென்று வாய்விட வெட்கப்பட்டவர்களாக—அலைகிறார்கள். அவர்களை அழைத்து ஒரு விருந்து கொடுத்து, 'சலாம்' போட்டனுப்பவேண்டும். பார்த்த இடங்களில், ஒரு கோப்பி, ஒரு சுருட்டு, ஒரு 'சலாம்'. பத்திரிகைக்காரர்கள் எங்கேயாவது படம்பிடிக்க நேரிட்டால், உடனே தலையை நீட்டவேண்டும். விடிந்ததும் அடுத்த வீட்டு அப்புக்காத்து வீட்டிலோ, பின் வீட்டு பிரக்கிராசி வீட்டிலோ, பத்திரிகையை இரவல் வாங்கி, "ஐயோ பத்திரிகையை நாய் மென்று தின்றுவிட்டதே" என்று புகார் ஒன்றைக் கிளப்பவேண்டும். இரகசியமாக உங்கள் படத்தை வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். அந்தப் படத்தைத் தெரிந்தவர், தெரியாதவர்களுக்கெல்லாம் காட்டிக்கொண்டு திரியவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளிருந்தால், கடன் பட்டா வது ஒரு 'பொடிய'னைச் சர்வகலாசாலைக் கனுப்பவேண்டும். பெண்ணை சிதம்பரத் திற்கோ, சென்னைக்கோ அனுப்பிச் சங்கீ தம் படிப்பிக்கவேண்டும். சங்கீதம் பயின்று திரும்பியதும், இரண்டு மூன்று கச்சேரிகள் செய்யவேண்டும். கச்சேரி சோபித்தாலென்ன, விட்டாலென்ன...... உபசரிக்கப்பட்ட பத்திரிகை நிருபர்கள் தானே இருக்கிறார்கள்? அவர்கள் பார்த் துக்கொள்வார்கள். ரேடியோவில் பாடு வதற்கும் மனு எழுதிப்போடுங்கள். அந் தப் பாக்கியம் மட்டும் கிடைக்காதென் பது நிச்சயம். இந்தச் சமயத்தில்தான் உங்கள் சாமர்த்தியத்தை காண்பிக்கக் கொடுக்கிழுத்துக் கட்டவேண்டும். உமது சிநேகிதர்கள்... ஆலோசனை...கதை கிளப் புதல்...குற்றச்சாட்டு . பிரமுகர்கள் பிற் கதவில் சந்தித்தல். இரண்டு மூன்று மனு திரும்பவும் ஆலோசனைச் சபை...இதற் குள் நீங்கள் பிரசித்தியும் கீர்த்தியும் அடைந்து விடுவீர்கள்!



உங்களைக்கூட சில சமயத்தில் ரேடி யோகாரர்கள் 'காற்றில் நிற்கும்'படி அழைப்புப் பத்திரங்கள் அனுப்பியபடியே இருப்பார்கள். உங்களுக்கு ஏற்ற விஷய மாக இரண்டொரு 'பதார்த்தம்' தயா ரித்து ஆயத்தமாக வைத்திருக்க வேண் டும். ''சரீரமும் சாரீரமும்'', ''கழுதை யும் கானமும்'' என்ற விஷயங்கள் பற்றிப் பொழிந்து தள்ளவேண்டும். அப்படி அவர்கள் அழைக்கா விட்டால், ''என்னை ஏன் கூப்பிடவில்லை? என்னை யாரென்று தெரியாதோ?'' என்று உங்கள் யோக் கியதா பத்திரங்களில் சிலவற்றையும் சேர்த்து ஒரு 'வெருட்டு' விடவேண்டியது தான்...ரேடியோவில் நிரந்தரமான உத்தி யோகம் கிடைத்தாலும் கிடைத்துவிடும்!

பிற்குறிப்பு: பிற ஊர்களிலிருந்து யாராவது பெரியவர்கள் வந்தால் புகை யிரத நிலையத்திற்குச் சென்று அழைத்து வந்து, விருந்து போடவேண்டும். தேர் தல் விஷயங்களிலும், அரசியல் விவகாரங் களிலும் தலையிடவேண்டும். கல்யாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சாவீடுகளில் 'முன்' நின்று 'நடத்த' வேண்டும். இப்படியாக இரண்டு வருஷங்கள் செய்து வாருங்கள். ஆனால் ஒன்று. இந்த ஆலோசனைகளால் மேல் ஸ்தாயியை அடைந்துவிட்டேனே யென்று, ஏழை 'சாணு'வைக் கண்டால் எறிந்து நடக்கவேண்டாம்.

*



மேல் ஸ்தாயி
(அபிமானிகளுக்கு மாத்திரம்)



கீழ் ஸ்தாயி
(இரசிகர்களுக்கு மாத்திரம்)

# அம்பட்ட அம்பலவன்

அம்பலம் வருகிறானென்றால், வீடுகளிலெல்லாம் ஒரே ஆரவாரம் சரியாகச் சொல்லப் போனால் அம்பலம் அரசாங்க ரயில் மாதிரி. சாதாரணமாக, இரண்டு நிமிடங்களுக்குமேல் ஓரிடத்தில் தங்கமாட்டான். பெரிய இடங்களில் சிலவேளைகளில் பதினைந்து நிமிடங்களும் தங்குவான். அங்கு தனக்கு ஏதாவது ஆதாய வேலை இருந்து விட்டால், மணிக்கணக்காகும் கிளம்ப.

வாட்டசாட்டமான தேகம். ரெயில் நிறம். 'கிராப்' தலை. நெற்றியில் குறி. முழங்காலுக்கு மேல் வெள்ளை வேட்டி கட்டி, அதைத் தளரவிடா வண்ணம் ஒரு சால்வைத் துண்டை அதைச் சுற்றி இறுக்கியிருப்பான். இருகையிலும் மோதிரங்கள். ஒன்று சங்கு. மற்றது 'சொகுஸா'! இடப் பக்கத்திலிருக்கும் தோற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் இருந்து ஒரு கத்தி, கத்திரி கோல், முறிந்த சீப்பு, பழந்தோல், கல், 'கிளிப்பா' முதலியன வெளியே தலை காட்டும்.

அம்பலம் மலாய் நாடு போய் திரும்பியவன். குவாலாக்கன்சுவில் பெரிய 'சலூனி'லே வேலைபார்த்து, பிறகு தன்னுடைய சொந்த வியாபாரத்தைக் கிளாந்தனிலே நடத்தி வந்தவன். தலைமயிர் வெட்டுவதற்கு, குப்பிளான் ஏழாலை முதலிய பிரதேசங்களில் இருந்து தெல்லிப்பழையை நாடுவார்கள். அம்பலத்தின் தலைமயிர் வெட்டுக்குப் பிறகு, தலையைத் தடவினுல், அதிலேயே ஒரு தனிச் சுகம் இருக்கின்றது.

எங்கும் அம்பலத்தைக் காணலாம். சிலருக்கு 'ஒரு நாள் ஒரு பொழுதாவது' அம்பலத்தைத் தரிசிக்காது விட்டால் 'அந்தரமாக' இருக்கும். அநேகமாகப் பெரிய புளியடியில் அம்பலத்தைப் பேட்டி காண்போர் மொய்த்துக் கொண்டிருப்பார்கள். அம்பலம் வரும் வரையும் சிலர் பொழுது போக்காக, ''டாக்-டீக்-



டொக்'' அல்லது 'நாயும் புலியும்' முதலிய ஆட்டங்கள் விளையாடிக் காலங் கழிப்பார்கள். அம்பலம் தோன்றியதும் அக்கம் பக்கத்து வீடுகளில் தண்ணீர் வாங்கி, முகத்தை நனைத்துக் கொண்டு வரிசையாக நிற்க வேண்டியதுதான், அம்பலம் சிரை சிரை யென்று, சிரைத்து ஒதுக்கிவிடுவான்! சூடுள்ள தேகக்காரர் இதற்கிடையில் ஒருதரம் பூசிய தண்ணீர் காய்ந்து போக, மறுதரம் பூசவேண்டியும் வரும். அன்றுதான் அம்பலத்துக்கு ஆனந்தம். அலைச்சலில்லை. நின்ற நிலையில் வேலை.

அம்பலம் கால் மிதியாத இடங்களே கிடையாது. பெரிய இடத்துப் படலை தொடக்கம், குச்சு வீட்டுத் தட்டி மட்டும் அம்பலத்துக்கு 'நடப்பு'. அவனைக் கண்டால் குழந்தைகளுக்கு குடல் நடுக்கம். அம்பலம் என்ருல் குழந்தைகள் அழும், பெயருக்குத் தகுந்தபடி அம்பலம் பெரும் சிவபக்தன். மற்றும் கோவில்களைப் பார்க்கிலும் தச்சங்கடவைக்காளிகோவிலுக்குத் தான் பயமதிகம். சைவ முறைகள் தவருதவன். காளிகோவிலில் வருடா வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் 'வேள்வி'யில் கொழுத்த கிடாய் ஒன்று பலி கொடுப்பான். நன்ருகக் குடித்து, ஆட்டையும் சாப்பிட்டு, மனைவியுடன் ஐந்தாறு நியாயம் பேசி, தலை நிமிர்த்த முடியாமல், கை கால் ஓய்ந்து ஒரு மூலையில் சாய்ந்து விடுவான். அன்று தான் அம்பலத்துக்கு ஓய்வு நாள். திரு நாள்!

ஆலமரத்தடி வயிரவ கோயிலில் மடை நடக்கிற காலங்களில், அப்பலத்துக்கு 'உரு' ஏறும். அரசாங்க சபையில் எங்கள் பிரதிநிதிகள் மாதா மாதம் பெறும் சம்பளத்திற்காக, ஊர்களிற் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி, ஒருவருக்கு ஒருவர் 'குஸ்தி' போட்டு, 'உரு'க் கொண்டு, சந்நதங் கொண்டு ஆரவாரப் படுவார்களே, அதே மாதிரி அம்பலமும் 'உரு'க் கொண்டு சந்நதங் கொண்டு, ''கோயிலைச் சுற்றிவர மதில் கட்ட வேண்டும். மாதம் ஒரு முறை எனக்குச் சர்க்கரைப் பொங்கல் பொங்க வேண்டும்'' என்பன போன்ற பிரகடனங்களைப் பிரேரிப்பான். அரசாங்க சபைப் பிரதிநிதிகளைப் பற்றி எனக்கு



அனுபவமதிகமில்லை. ஏன், அக்கறையுமில்லைத்தான். ஆனுல், அம்பலத்தின் சொற்கள், உடனே அம்பலத்தில் ஏறும். பழைய நாட்களிலே கொழும்பு-கறுவாத் தோட்டப் பகுதியிலிருந்து எங்கள் பகுதித் தேர்தலுக்கு வருகிருர்களே ஆகையால், அம்பலத்தையும் ஒருதரம் அனுப்பி வைத்தாலென்ன என்று நாங்கள் எல்லோரும் சிறுவர்களாயிருந்த பொழுது யோசித்ததுண்டு. அனுப்பியிருந்தால், எவ்வளவு உசிதமாய் இருந்திருக்கும்... நினைத்த காரியத்தை அம்பலத்துரையைப் பிடித்து கையோடை செய்து முடித்திருக்கலாமே.

இப்படியாக அம்பலம் சந்நதம் ஆடிக் கொண்டிரும் அதே நேரத்தில், பூகாத்தை என்ருெரு பெண்ணுக்கும்'உரு' ஏறும். சிறிது சிறிதாகத் தொடங்கி, பூகாத்தையின் பூத உடல் அசைந்து ஆடிக் குதித்து ஆவேசங் கொள்ளத்தொடங்கிப் பெரிதாய், பெரிது பெரிதாகி விடும். அச் சமயம் அம்பலத்தைக் கைவிட்டு, பூகாத்தையைப் பார்க்க ஓடி விடுவார்கள். சின்ன மேளம்என்ருல் நன்ருய்த் தான் விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார்கள் எங்கள் ஆட்கள். அன்று அம்பலத்தைக் கைவிட்டவர்கள், எல்லோரும் அடுத்த நாள் அம்பலத்தின் வரவை ஆத்திரத்துடன் காத்திருந்திருப்பார்கள். அம்பலத்தின் அருமை அப்பொழுதுதான் தெரியும்.

ஓய்வு நேரங்களில் அம்பலத்திடம் அகப்பட்டு விட்டால் ஒரே 'புளுகு' தான். தான் சிங்கப்பூரிலே செய்த அற்புதங்கள், அதிசயங்கள், அநியாயங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரும். சிங்கப்பூரிலிருந்து வருகிறவர்கள் புளுகர்கள். அதிலும் அம்பலத்தின் சாதியினரென்ருல் சொல்லத் தேவையில்லை. அப்படியானுல், சிங்கப்பூரிலிருந்து திரும்பிய அம்பலத்தைப் பற்றிய வியாக்கியானம் அவசியமில்லை சிங்கப்பூரில் அவனுக்கு அதிகமாகப் பிடித்தது மூன்று சதத்துச் சீனன் கோப்பிதானும். 'அது ஒன்று குடித்தாலே போதும். முழுநாளும் சாப்பாடே தேவையில்லை' என்பான்.

மலாய்க்காரரின் 'ரொங்கிங்' கூத்துக்கூட அம்பலத்திற்குத் தெரியும். அம்பலம் 'ரொங்கிங்' ஆடி, அப்படிச்



சுழன்று வந்து, ஒரு சிரிப்புப் போட்டானென்ருல். கடைவாய்க்குள் மறைந்திருந்த சீனன் கட்டிய பொன் பல்லு மின்னி மறையும். மலாய்க்காரர் மாதிரி சாரத்தைச் சுருட்டிக் கட்டியிருப்பான். அதற்குப் பெயர் 'லுங்கி' என்பான். சிங்கப்பூரிலிருந்த இன்னெருவரைச் சந்தித்தால், அவன் தமிழை மறந்து விடுவான். உடனே மலாய்ப் பஷையில் இருவரும் பேசத் தெடங்கி விடுவார்கள். எங்களுக்குப் பெரும் ஆச்சரியமாய் இருக்கும். 'நீங்கள் இனிமேல் நிற்பதில் பிரயோசனமில்லை' என்ற தோரணையில் அம்பலம் பரிதாபமாய்ப் பார்ப்பான். புளுகு கேட்கப் போன எல்லோரும் வீடு திரும்ப வேண்டியது தான்.

கலியாணவீடு, செத்தவீடு முதலிய தினங்களில் அம்பலம் தனது மூன்று வயது மொட்டையனுடன் தோன்றுவான். அந்நாட்களில் வண்ணுர வயிர முத்துவுக்கும், அம்பட்ட அம்பலத்திற்கும் யார் சாதியில் குறைந்தவர்கள் என்ற பெரிய விவகாரம் கிளம்பும். அதிலிருந்து சிறு சண்டையும் எழும்பும். ஆனுல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளை நிதானமாகக் கவனித்து வருவான் அம்பலம். அணுவளவும் பிசகமாட்டான். பெண்ணுக்கோ ஆணுக்கோ 'தோயவார்க்கும்' நேரங்களில் வாழ்த்துவதற்கு வாயைத் திறந்தால் எண்ணூறு யாருக்குள் இருக்கிறவர்களுக்கு தூக்கமே கிடையாது .. ஒரே ஏக்கமாகத்தான் இருக்கும்.

சில நாட்களுக்கு முன் அம்பலத்தைச் சந்திக்க நேர்ந்தது. கூப்பன் கொடூரத்தினால், வயிறு ஒட்டிக் கிடந்தது. கையும் காலும் தளர்கிற பருவம். நான் கடைசியாகச் சந்தித்து, இப்போது பதினெட்டு வருடங்களாகின்றன. அப்பொழுது அம்பலத்திற்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். ''என்ன அம்பலம் எப்படித் தொழில் சுகங்கள்?'' என்று கேட்டேன். ''என்னவும் உங்களைப் போலயோ இப்போதையப் பிள்ளைகள் சீ! முளைக்க முந்தி 'சௌரம்' பண்ணத் தொடங்கிவிட்டார்கள். அதுவும் ஒவ்வொருத்தரிடமும் ஒவ்வொரு ஆயுதம் வீட்டிலே கிடக்கிறது. அதாலே போட்டுச் சுறண்டுகிறார்கள். மயிர் வெட்டுகிறதென்றால், பட்டணத்



துச் சலூனுக்குப் போகினம். என்ன எடுப்பு ..ஏன் முந்தி உங்களுக்கெல்லாம் நான்தானே வெட்டுகிறனான். ஏன் உங்களுக்குத் தலையிலே எப்போதாவது பழுது கிழுது வந்ததோ?'' என்று வெகு மன்றாட்டமாகச் சொல்லி மேலும் பல குறைகளை இப்போதைய நாகரிக யுவர்கள்மீது சுமத்துவான். அவற்றை நான் சொன்னால் ஒரு வேளை 'இவர்கள்' அவனோடு சண்டைக்குப் போகக்கூடும். எங்களூர் பிள்ளைகள் அல்லவா? என்ன நடந்தாலும், 'போர்த்து' மறைக்க வேண்டியது எங்கள் கடமை.

'அது இருக்க, உனக்கு ஒரு மொட்டையன் இருந்தானே அவன் எங்கே?'' என்றேன். 'அதேன் தம்பி சொல்ல?' கண்களைக் கசக்கத்தொடங்கினான். 'இந்தக் கேள்வியை ஏன் கேட்டேன்' என்று என்னையே நான் திட்டிக் கொண்டேன். ''யப்பான் சிங்கப்பூரைப் பிடிக்க ஒரு வருடத்துக்கு முன்தான், அவனுடைய மச்சான் காசானிலே இருந்து தந்தி அடித்துக் கூப்பிட்டவன். போனவன்தான் தம்பி; எட்டுக் கடுதாசி போட்டேன். அதுக்குப் பிறகு யாரோ சொன்னார்கள் சிங்கப்பூரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பான் பிடித்துவிட்டான் என்று. மெய் தானு தம்பி?'' என்று அழுதவண்ணம் கெஞ்சினுன். ''அதற்கென்ன இப்போ? ஒன்றும் நடந்திருக்கமாட்டாது. அவர்களுடன் சீவியம் பண்ணுகிறதென்ருல் பெருங் கஷ்டமாக இருக்கும். பெரும் தொந்தரவுக்காரர். ஏன் உனக்குத்தானே தெரியும் யப்பானைப் பற்றி?'' என்றேன். ''ஓமாக்கும் தம்பி; எனக்கும் ஒரு ஐம்பது அறுபது யப்பானைத் தெரியும். முந்தி என்னுடைய கடைக்குத்தான் சௌரம் செய்ய வாறவர்கள். பொல்லாத ருங்கிக்காரர்கள்'' என்ருன். ''அப்படியானுல் எங்களுடைய ஆட்கள் ?'' என்று இழுத்தேன். அழுதுகொண்டிருந்த அம்பலம் கண்ணைத் துடைத்துவிட்டு, ''தங்கக்கம்பிகள் . தட்டினுலும் வளையாது. செல்லப் பிள்ளைகள். காலையிலே உலாத்த ஒரு உடுப்பு; மத்தியானம் சாப்பிட ஒரு உடுப்பு; கந்தோருக்கு ஒரு உடுப்பு; பின்னேரம் பந்தடிக்க ஒரு உடுப்பு; இராச் சாப்பாட்டுக்கு ஒரு உடுப்பு. இனி இரவிலே 'டான்சு' என்ன? சொகுசாய் சீவிக்கிறவர்கள் கறண்டி முள்ளென்ன .. பல்லுமினுக்க 'பிறஷ்' என்ன... எவ்வளவு



துப்பரவு? எவ்வளவு குதூகலம்... யப்பானேடை இவர்களையும் நேருக்கு வைத்துப் பேசுகிறீரே. படித்தும் புத்தியில்லையாக்கும் தம்பிக்கு!? என்று புத்தி புகட்டத் தொடங்கினுன்.

அம்பலம் தன் தொழிலையும் குடும்பத்தையும் குறைவில்லாமல் நடத்தி வருவதாகக் கேள்வி. ஆனுல், மகன் யப்பானிடம் சிக்கிக்கொண்டானே என்ற துக்கம் தலையைக் கொஞ்சம் குழப்பிவிட்டிருக்கிறது. போஸ்ற் மாஸ்ரருக்குச் 'சௌரம்' செய்யும் போதெல்லாம் தன்னுடைய மகனிடம் இருந்து ஏதாவது தந்தி, தபால், 'போஸ்ற் காட்' வந்திருக்கிறதோ என்று மட்டும் கிரமமாக விசாரித்து வருகிருனும்.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி பேதம்

ஏவனொருவன் தமிழனுகப் பிறக்கின்ருனே, அவனுடன் சாதியும் பிறந்து விடுகின்றது. இதைத் தடுக்க எத்தனையோ மகான்கள் எத்தனித்தும் பயனில்லை. பெரியோர்கள் ''சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்...'' என்றே பாடினுர்கள். மானிட மர்ம சாஸ்திரிகள், ஆண்களையும் பெண்களையும் பல சாதிகளாக்கி யிருக்கிருர்கள். மானிடப் பிறவி யெடுத்த இவர்களை மிருகங்களோடொப்பிட்டு எல்லோரையும் மிருக சாதிகளாக மாற்றியுமிருக்கிருர்கள்.

ஆண் சாதிகளுள் சிலர் நாடக மேடை மீது 'பெண்சாதி'யாகி விடுகிருர்கள்! பெண்சாதிகளிற் சிலர், தத்தம் வீடுகளில் 'ஆண்சாதி' யாகி ஆதிக்கஞ் செலுத்துகின்ருர்கள். ஆண் சாதியும் பெண் சாதியும் சேர்ந்து சில காலங்களில் மிருக சாதியாகி விடுகிருர்கள் ...சாதியென்பதெல்லாம்



பொய்—மாயை! என் முன்பு இவைகளெல்லாம் ஒரே சாதியாகத்தான் தோற்றுகின்றன.

அங்கபேதங்களின் மூலமாக நாம் ஆண் சாதியோ பெண் சாதியோவென உடனே தெரிந்து விடுகிருேம். அங்க பேதங்களை ஆதாரமாகக் கொண்டு இவ்விரு சாதிகளையும், மானிட மர்ம சாஸ்திரிகள் கூறியவண்ணம், இவர்களின் உருவ அளவை நிதானித்து, எந்த மிருகத்தை ஒத்திருக்கிருர்கள் என்பதையும் அறிந்து விடுகிருேம்.

ஆனுல், எல்லாவற்றிற்கும் மூலகாரணம் நாதம். நாதத்திலிருந்து தான் இம் மாயா உலகம் உற்பத்தியானது. மெல்லிய காற்றிலும் நாதம்—மலைப் பாறைகளிலிருந்து சொட்டும் ஒவ்வொரு நீர்த்துளியிலும் நாதம்—கரை புரண்டோடும் வெள்ளப் பெருக்கிலும் நாதம் — எங்கும் நாதம்—நாத மயம்! ஆகையினுல், நாதம் என்னும் ஒரே சாதியை, அவற்றிலிருந்து பிறக்கும் நாதத்தைக் கொண்டு, பல சிறு சாதிகளாகப் பிரிக்க முயல்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதத்தைக் காரணமாகக் கொண்டு, சாதி வித்தியாசம் பாராட்டும் எனது கட்டுரை, ஆண் சாதிகளுக்கும், பெண் சாதிகளுக்குமிடையே பெரும் கலாதியை உண்டுபண்ணக் கூடுமென்று சந்தேகம் எழுப்பும் கேள்வி ஒன்று என் காதுகளிலே விழுகின்றது. ஆராய்ந் துணர்வதற்குத் தகுந்த 'தளவாடங்கள்' எங்களிடத்திலிருக்கின்றன; மிருகங்களிடத்து மிருக்கின்றன. மிருகங்களை ஒத்திருக்கும் எங்களுக்கு நான் மேற்கூறியபடி கலாதி யுருவெடுக்குமென்ற உணர்ச்சிஏற்படுமாஞல், இதற்குமேல் இக்கட்டுரையை வாசிக்கவேண்டாம். பயப்படாதோர் தொடர்ந்து வாசிக்கட்டும்.

**யாழ்ச்சாதி:** தேசம் விட்டுப் பிறதேசம் சென்று, உண்மை ஞானத்தை வெளிக்காட்டி, புகழும் பட்டமும், தனக்கொரு பட்டினமும் பெற்றுத் தனது சாதியினருக்கும் அப்புகழை ஊட்டி மகிழ்விப்பவர். யாழ்ப்பாணத்தவர்களுள் உண்டான சாதிகளில் இதுதான் ஆதி. இதைக் குருட்டுச் சாதி என்று நாங்கள் இப்போது சொல்லிக்கொள்கிருேம்.



**சங்குச்சாதி:** வருடத்திற் கொருமுறை, பனிக்காலங்களில் சில நாட்களுக்கு, சூரியோதயத்திற்கு முன் தோன்றி மறையும் பக்தகோடிகள். இந்நாட்களில் அவர்களுடன் சேர்ந்து நாமும் பாடுவோம்; அவர்கள் தூங்கிஞல் நாமும் தூங்குவோம். இது பனிக் காலங்களில் உற்பத்தியாகும் ஒரு 'விசாதி'யென்றும் பலர் கருதுவர். தற்போதைய வயித்தியர்கள் இதைக் குளிர் வாய்வு, என்பர்.

**சேமக்கலசாதி:** முன் குறித்தபடி, வருடமொரு முறை கிளம்பிச் சங்குச்சாதியின் அமர்க்களத்தை யடக்கும் எண்ணத்துடன் தொண்டு புரிந்துவரும் ஒருவித குழுவினர். தனியாக இருக்கும் வரை தீங்கற்றவர்கள். இவர்களை யாராகிலும் தட்டிக் கொடுக்கவேண்டும். இவர்களிடம் வரம் வேண்டின், யாரும் அணுகலாம். பெரியார் - சிறியார் - அறிவுடையார் - அறிவிலர் என்ற வித்தியாசம் பாராட்டா உத்தமர்கள்.

**வயலின் சாதி:** இது அநேகமாகப் பெண்மணிகளுள் தோன்றும் ஒரு பிற சாதி. பெற்ருேர்களால் தங்கள் குமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தோள்களில் சுமத்தப்பட்டது. உலக சீவியத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த எத்தனையோ குமர்கள் இதை உதவியாகக் கொண்டு கரை சேர்ந்திருக்கிருர்கள். மதனது வில்லு, இவர்கள் கரங்களில் எப்பொழுதும் காட்சியளிக்கும். உற்சாகப்படுத்துவதற்கு குங்கிலியம் அவசியம். பெற்ருேர் தின விழா—பரிசளிப்பு விழா—பிரியா விடை விழா முதலிய உற்சவ காலங்களிலேஇவர்களுடைய சேவை தேவையானது. மேலைத் தேசங்களிலும் இச்சாதியினர் சஞ்சரிக்கின்றனர். இஃது ஒரு கலப்புச் சாதி.

**ஒத்தூது சாதி:** கர்நாடக முறைகளின்படி, இவர்கள் உயர்ந்தவர்கள். இவர்களை நிதானித்துத்தான் மற்றவர்கள் நடக்க வேண்டுமென்று தரும நூல்கள் கூறுகின்றன. ஆனல், இம்முறையை வெகு சிலர்தான் பின்பற்றுகிருர்கள். இச்சாதியினரது பார்வை அநேகமாகக் கீழ் நோக்கிய வண்ணமாகவே யிருக்கும். சில காலங்களில் விட்டுக் கொடுத்து விடுவார்கள். சனத் தொகை குறைவான சங்கங்களிற் சல்லாரி சாதியின் பிரதிநிதியாகவும் தோற்றுவர். இவரையடக்குவது,



நாதஸ்வர சாதியினரின் தனியுரிமை. உற்சவ காலங்களிலும், மற்றும் சுப தினங்களிலும் இவர் தவிற்சாதி, நாதஸ்வர சாதி முதலிய சாதிகளுடன் ஒத்துழைப்பர். அவர்களுக்குக் கிடைக்கும் சன்மானங்களைச் சுமந்து செல்வது இவர் பொறுப்பு. சன்மானங்களில் இவர் பங்கு சொற்பம். இவ்வுலக வாழ்க்கைக்கு இச்சாதியினர் அத்தியாவசியம். ஆனல், நாம் இதற்கிணங்க மாட்டோம். எச்சுப கருமத்திலேனும் இவர்கள் வாய் திறந்தால்தான் மற்றவர்கள் திறப்பார்கள். இவர்களை ஊமைச் சாதியென்றும் அழைப்பர்.

**நாதஸ்வரசாதி:** தூரப் பார்வைக்கு, ஒத்தூது சாதியினரைப் போலிருப்பார்கள். சமீபத்தில் 'கண் கூர்ந்து' பார்த்தால் அவர்களின் விசேட அம்சங்கள் விளங்கும். இவர்களிற் சிலர் பேசும் போது தொண்டை யடைப்பு, கரகரப்பு முதலிய 'விக்கினங்கள்' ஏற்படும். அந் நோய்களைக் கிளறிச் சுத்தம்பண்ண ஏற்ற சூரணங்களைக் கைவசம் வைத்திருப்பார்கள். இவ்வானந்தக் கோட்டைகளுக்குப் பல ஓட்டைகளும் உள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சல்லாரிசாதி:** உலகத்தில், உண்மையாக மெச்சத் தக்க நிலையில் யார் இருக்கிறார்களோ அவர்கள்தான் இச்சாதியைச் சேர்ந்தவர்கள். கணக்கு வழக்குகளைச் சரிவர அமைத்து, அடிக்கு அடி வைத்து, அடி தவறாது நடப்பவர்கள். காலவித்தியாயங்களினால் உண்டாகும் சில சச்சரவான நேரங்களில் இவர்கள் முறை பிசகுவதும் உண்டு. இதைக் காரணமாகக் கொண்டு நாம் இவர்களைத் தள்ளி வைக்கக் கூடாது. காலம் மாற மாற, எப்படியாவது சமாளிக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் தமது பாட்டுக்கு இழுபட்டு விழுவதே இவர்களின் உதார குணத்திற்குச் சான்றாகும். மற்றும் சாதியினருக்கு இயைந்தபடி தாளம் போடுவதும் இவர்களினது பிறப்புரிமை. இந்நவீன முறையைக் கைவிட்டால், இவர்கள் பிழைப்பது கஷ்டம். பொதுவாகக் கூறின் இவர்கள் ஒரு அமைதியான சாதி.

**பியானோசாதி:** இவர்கள் மேலைத் தேசத்திலிருந்து வந்த பல சாதிகளுடன், பகிரங்கமாக வந்து சேர்ந்த பரதேசிகள். இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் பலர், எங்கள் தமிழ் மக்களில் இருக்கிறார்கள்.



இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பதே முக்காலும் பெண்களே. கலியாண விடயங்களில் இவர்களுக்கு ஒரு வித 'விக்கனமும்' இல்லை. இச்சாதியைப் பற்றி எனக்கதிகம் வராது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இச்சாதியார்கள் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகாபிமானம் வளருமா?

வழக்கமாகக் காலையில் நித்திரை விட்டெழும் போது வலப்பக்கம் புரண்டெழும்பும் நான் இருபத்தைந்தாம் திகதி காலை வலப்பக்கம் திரும்பியதும், பக்கத்தில் தேள் இருக்கக் கண்டு, இடப் பக்கம் புரண்டெழுந்தேன். வழக்கமாக இரட்டைத் தும்மலிடும் என் குழந்தை அன்று ஒரு தரம் தும்ம, நான் நூறென்றேன். நூற்றென்று சொல்லும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. எனக்கு தினந்தோறும் காலையில், கோப்பி கையிலேந்திச் 'சகுனம்' அளிக்கும் என் மனைவியின் தரிசனம் கூட அன்று கிடைக்கவில்லை. 'இதென்ன அபசகுனம்' என்று எண்ணியவாறு, ''கோப்பி'' என்றேன். மனைவி மௌனமாக இருந்தாள். 'என்ன சீனியில்லையா? போனமாதந்தானே அரைக்



கால் றாத்தல் சீனி வாங்கிக் கொட்டினேன்'' என்று என் அடிக்கிடக்கையை அவிழ்க்க முன், ''சீனியெல்லாமிருக்கிறது. கோப்பித்தூள் தானில்லை'' என்றாள் என் மனைவி. இந்த விருத்தாந்தமெல்லாம் இருபத்தைந்தாம் நாட்காலை என் வீட்டில் நடந்தவை.

கந்தோர் சேர்ந்ததும், குதூகலமாக இருக்கும் எங்கள் ஆசிரியர் குழுவினர் அன்று ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந்திருந்தனர். ஆசிரியரைப் பார்த்தேன். தலையைத் தடவிக்கொடுத்துக்கொண்டே மேசையைப் பார்த்துக்கொண்டிருந்தார். மேசையை நோக்கினேன். இருபத்தைந்தாம் திகதி 'சிம்லாவில் மகாநாடு' என்ற தலையங்கத்துடன் ஒரு பத்திரிகையிருந்தது. விளம்பர அதிபர் வித்தியாசமாக இருந்தார். சந்தா அதிபர் சமநிலையை இழந்திருந்தார். உதவியாசிரியர் உற்சாகமின்றி இருந்தார். கந்தோரில் நிசப்தம் உலவிற்று. காரணம்? சிம்லா மகாநாட்டின் மர்மம் வெளியானால்தான் இவர்கள் வாய் திறப்பார்களோ? ஒவ்வொரு தனிமுறையான கொள்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் வைத்துக் கொண்டுதான் பத்திரிகை நடத்துவது சகஜம். இன்றைய கொள்கை 'பேசாமை'யாக இருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் நானும் வாய் திறவாது என் ஆசனத்திலமர்ந்து ''ஆ'' வென்று கொண்டிருந்தேன். இந்தியாவின் சுதந்திரத்தில், இவர்களுக்கு என்ன சிரத்தை? சிம்லா மகாநாடு வெற்றிகரமாக முடியவேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறார்களோ? ''இன்றைய மௌனத்திற்குக் காரணம் தேசாபிமானமோ?'' என்று வினவினேன், ''இல்லை, இல்லை பத்திரிகாபிமானந்தான் காரணம்,'' என்றார் ஆசிரியர். ''அபிமானத்திற் கென்ன வந்துவிட்டது? தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் உயிரோடிருக்கும் வரை அபிமானம் இருக்கத்தான் செய்யும். அதற்கென்ன கடும் யோசனை?'' என்றேன் நான். அவர் என்னைப் பார்த்து, ''பத்திரிகை—அதற்கொரு அபிமானம்—இதோ, இதை வாசித்துப்பாரும்'' என்றொரு கடிதத்தை நீட்டினார்.

''...வணக்கம் யான் சென்ற இருமாதகாலமாக இருபத்தினான்கு கட்டுரைகளும், பதினெட்டுச் சிறு கதைகளும் பிர



சுரத்திற்காக அனுப்பியுள்ளேன். அவற்றைப் பிரசுரியாததின் ஏதுக்கள் யாவை? நான் சந்தாதாரனாகச் சேர்ந்ததன் நன்னோக்கம் என் எழுத்துக்களை மற்றோர்க்கும் புகட்டும் பொருட்டே. உங்கள் பத்திரிகையில் வாராவாரம் வெளியாவதெல்லாம் குப்பை கூளங்களே. ஆகையால், தொடர்ந்தும் நான் சந்தாதாரனாக இருக்க விரும்பவில்லை. அத்துடன், எனது மற்றைய நண்பர்களும் அங்ஙனம் செய்யவே உத்தேசித்துள்ளார்கள்... '' என்றும், இன்னும் பல 'திட்டுக்களும்' அக்கடிதத்தில் இடம்பெற்றிருந்தன. ''இதனாலென்ன இடுக்கண் நேர்ந்து விடப் போகிறது? அவரின் ஒரு கட்டுரையையாவது போட்டுத் தொலைத்துத் திருப்திப்படுத்துவதுதானே?'' என்று சந்தாப் பணம் பெருகவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் சந்தா அதிபர் வேண்டினார். ''சும்மா இரும். குப்பை கூளங்களையெல்லாம் போட்டால் பத்திரிகைக்கு மதிப்பெங்கே?'' என்று ஆசிரியர் சீறினார். ''பத்திரிகையில் காலியாக இடமிருந்தால் சொல்லுங்கள். யுத்த காலத்தில் மேலதிகமான விளம்பரங்கள்தான் வருகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனவே, ஒன்றைப் போட்டுக் காசாக்குவதுதானே?" என்றார் விளம்பர அதிபர். இம் முப்பெருந் தலைவரின் முடிவை எதிர்பார்த்த வண்ணமாக உதவி ஆசிரியரும் நானும் அடக்கத்திலிருந்தோம். "என்ன சாணு, ஏதாவது சொல்லித் தொலையும்" என்று என்மீது தாவினார் ஆசிரியர்.

"நெடுநாளாகச் சொல்ல வேண்டுமென்ற பேரவாவுடனிருந்த எனக்கு, இன்று ஒரு சந்தர்ப்பமளித்ததற்கு என் வந்தனம்," (கைகூப்பி, தலைகுனிந்து, ஒரு கும்பிடு போட்டு) என்று எனது பிரசங்கத்தைத் தொடங்கினேன். "இந்தச் சிறு மிரட்டலுக்கு நீங்கள் இவ்வளவு யோசனை செய்தால், உண்மையாகத் தலை போகிற காரியமென்றால் தலையையே இழந்து விடுவீர்களோ? பத்திரிகையை வாங்கக் கூடாது, வாசிக்கக்கூடாது என்று நேர்முகமாகவோ, மறைபொருளாகவோ எவனொருவன் பிரசாரம் செய்கிறானோ அவனொருவனேதான் அப்பத்திரிகையில் உள்ள எல்லாவற்றையும் கட்டாயமாக வாசிப்பவன். ஆதலால், முதலாவதாக நாம் இன்று எடுத்துக் கொண்ட விஷ



யத்தை—அதாவது கடிதத்தை — கைவிடலாம்." அக்கடிதத்தை கை'பறிய' விட்டேன். என் கைக்குக் கீழே நேராகவிருந்த குப்பைக் கூடைக்குள் அது விழுந்தது. (கரகோஷம். இந்த ஆரவாரத்தைக் கேட்டு அச்சகத் தொழிலாளரும் - புத்தகம் கட்டுவோரும் - இயந்திரம் இயக்குவோரும் ஆசிரியர் காரியாலயத்துள் புகுந்தனர்.)

"விமர்சனத்திற்காகத் தமிழ் நாட்டிலிருந்து வரும் புத்தகங்கள், பத்திரிகைகள், ஆண்டு மலர்கள் முதலியவற்றிற்கு உண்மையான அபிப்பிராயம் கூறுவதா, அல்லது எழுத்தாளர்களைச் சாந்தப்படுத்தும் வகையில் விமர்சனம் 'பண்ணுவதா' என்பதுதான் என் இரண்டாவது பிரச்சினை. புத்தங்களில் ஏதாவது குற்றங்கள் காணப்பட்டால், புத்தக அட்டையைப் பற்றி ஓர் ஆலாபனம் மாத்திரம் செய்தால் போதுமானதன்று. குற்றங் குறைகளைக் கூசாமல் எடுத்துக் காட்டுவதே விமர்சகனுக் கழகு. அப்படிச் செய்வதனால் பொது மக்களுக்குப் பெரும் புண்ணியம் செய்பவனாவன். அல்லாவிடில், மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தையும் — ஏன் எழுத்தாளர் குழாத்தையும்—பிழையான பாதையைப் பின்பற்றும்படி தூண்டுபவனுவான். ஆகவே, நண்பர்களே! பத்திரிகா தர்மம் தழைத்தோங்குவது எங்ஙனம்? (...குத்து) விமர்சனம் விமர்சனமாகவே இருக்கட்டும். விண்ணுதி விண்ணன் எழுதினுலும் இம் முறையிலிருந்து விலகோம்.

''அடுத்தபடியாக, சங்கீத விற்பன்னரின் சச்சரவுகளை எடுத்துக் கொள்வோம். அவர்கள் பாடுவதெல்லாம் பாட்டு, என்ன பாட்டுக்குத்தான் இராகம் பாடிய போதிலும், விமர்சனம் வெளியாகும்போது உருப்படி உருப்படியாகவே தோன்ற வேணுமென்பது அவர்களின் செருக்கு. சற்று ஏறு மாருக நடப்போமேயாகில், பக்க வாத்திய சகிதமாகப் பாடுபடும் இப் பாடகர்கள் குடும்ப சகிதமாகப் பந்துமித்திரர் புடைசூழ கந்தோர் வாசலில் வந்திறங்குகிருர்களே! இதற்கென்ன செய்வதென்று நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? இல்லை. இதற்கு ஒரேயொரு வழியுண்டு. அவ்வகையான சங்கீத பூபதிகளுக் கென்று ஒரு தனி நிதி திரட்டி, இந்



தியாவுக்கனுப்பி மேலும், சங்கீதத்தையோ அல்லது சங்கீத ஞானத்தையோ விருத்திசெய்ய நாம் உதவ வேண்டும். இந்த நற்செய்கையால் பத்திரிகாபிமானம் செழிக்கும். (சபையிலிருந்தொருவர்:— அத்துடன் அவரை ஊரைவிட்டு அகற்றுவதாகவும் முடிகிறதே!)

''இன்னெரு ரகத் தினுசுகள் உளர். அவர்கள் கடிதமூலமாகக் கட்டுரைகளை அனுப்பிவிட்டுத் தாமாக நேரில் வந்து, கட்டுரையை எதற்காகப் பிரசுரிக்கவில்லையென்று அதட்டிக் கேட்கும் அஞ்சா நெஞ்சர்கள். இவர்களுக்கென்ன பதில் கூறுவது? ஏற்ற காலத்தில் அது பிரசுரிக்கப்படும் என்று பதிலளிப்பதா அல்லது கட்டுரை 'பச்சைப் படான்' என்று பச்சாத்தாபமின்றிப் பகருவதா? நன்றென்று சொன்னுல், நாள்தோறும் ஆசிரியரின் குப்பைக் கூடையைக் காலி செய்யும் நமது கந்தோர் பையனுக்கு வேலைக் கஷ்டமாக இருக்கும். அவன் சம்பள உயர்ச்சியைக் கேட்பான். ஆகையால்,

இவ்விஷயத்தை அதிபரோடு கலந்தாலோசிப்பதுதான் நலம்.

''கடைசியாக, இன்னெரு முக்கியமான சங்கதி கூற விரும்புகிறேன். சமயக் கொள்கைகளை மாறுபாடாக வைத்திருக்கும் சில பத்திரிகைகள், அவர்களது சமயத்தின் தலையெழுத்துக் கறுப்பை எங்கள் பத்திரிகைகளில் கண்ட மாத்திரத்தே, தங்கள் பத்திரிகைகளில், 'இன்ன பத்திரிகையில் இன்ன மாதிரி எழுதியிருக்கிறுர்கள்' என்று விளாசிவிடுகிறுர்கள். இதற்கு நாங்கள் ஏதாவது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அவசியமே இல்லை. ஏனெனில், இன்னும் ஏதாவது இருக்குமோ என்ற சந்தேகத்திஞல் எங்கள் பத்திரிகையை எம்மதத்தாரும் சம்மதத்தோடு வாசிப்பார்கள். எங்கள் பத்திரிகைக்கு இலவச விளம்பரம். ஆகையிஞல், நாம் பேசாமலிருப்பதே பெருந்தன்மை. வேறு அதிகமாகக் கூறுவதற்கொன்றுமில்லை. விசேஷமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் ஏதாவது வர நேரிட்டால், காலக்கிரமத்தில் ஆராய்ந்



துணர்வோம். பிரச்சினையைப் பிரச்சினையாக வைத்திருப்பவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள். உங்களுக்குத் தெரியும். மனிதருக்கு முதுகெலும்பு உண்டு. பத்திரிகைகாரரும் மனிதர்களே! வந்தனம்.'' (கரகோஷம் வானைப் பிளந்தது. நான் அமர்ந்தேன். இருந்தவர்களைவிட, வந்வர்கள் தங்களுடைய அலுவல்களைக் கவனிக்க மீண்டார்கள்.)

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈக்கள்

இந்த இரகசியத்தைப் பகிரங்கமாக்க நான் தயங்கவில்லை. ஈக்களைக் கண்டால், உண்மைக்கு உண்மையாக எனக்குப் பிடிக்கிறதில்லை. என்னைக் கண்டால் ஈக்களுக்கும் பிடிக்காமல் இருக்கலாம். இஃது உலகத்தின் இயல்பு. இரு பக்கத்திற்கும் சாயும் தன்மையுடையது.

பெரிய வீடுகளிலுள்ள ஈக்கள் சபைப் பழக்கத்தில் கைதேர்ந்தவையல்ல. அவற்றிலே கணக்கற்ற - பலவிதமான கிருமிகள் தொற்றிக் கொண்டிருக்கின்றன. சாப்பாட்டு மேசைக்கு வந்தால், பாலில் விழுந்து நீச்சலடித்து சாகஸமாகத் தப்பி, அரையவியல் உருளைக் கிழங்கை ஊர்வலம் வந்துதான் போகும். காரசாரமாக ஏதாவது இருந்தால், அவற்றின் உடம்பிற்கு ஒத்துக் கொள்ளமாட்டாது. எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும்தவ



றான அபிநயம் பிடிப்பதில் உண்மையான லக்ஷணம் பொருத்தியவை. இவை, மற்றவர்களைத் துன்பப்படுத்துவதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்நாட்களைக் கழிக்கும் வீணர்களாயினும், உலகத்திற்கு ஏதோ பெரும் நன்மை செய்கின்றோமென்ற எண்ணம் உடையவை. தங்களைத் தாமே ஏமாற்றும் யமகாதகப் பேர்வழிகள். (சில ஈக்களும் எங்களைப்போல சுபாவம் உடையவையெனத் தத்துவ சாத்திரிகள் ஆராய்ந்து சொல்லுகிறார்கள். எங்களிடமும் 'மொய்த்தற் குணம்' இருப்பது உண்மை. ஆனால், ஈக்களின் 'மொய்த்தற் குணம்' கொஞ்சம் மாறுபட்டிருக்கின்றது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.)

வீட்டு ஈச்களிற் சில, தமது சாமர்த்தியத்தைப் பறைசாற்ற கூரைகளின் உட்புறத்தில் தலைகீழாக நடந்து திரிவதுவழக்கம். இதில் கஷ்டமில்லை. வச்சிர மனப்பான்மையுடையவை. இவற்றின் பாதங்களில் பசைத்தன்மை இருக்கின்றது. (தற்கால விஞ்ஞானிகள் இதை ''உமிதற் குணம்'' என்பார்கள்.) எவ்வளவு முயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருலும், தாம் நினைத்தவுடன் கீழே விழ முடியாது. ஆகையால், புளுகுவதற்குரிய விசேட குணங்களென்று இதில் ஒன்று மில்லை. மேலைத் தேசங்களிலிருந்துவரும் இயந்திரங்களைப்போல, ஈக்களும் பார்ப்பதற்குச் சூனியமாகத் தோன்றும்.) ஈக்களுக்கு இரு சிறகுகள் உள. சிற்றுயிராராய்ச்சி நிபுணர்களின் கண்களுக்கு மாத்திரம் புலப்படக்கூடிய பிரமாணத்தில், மயிர்போன்ற இரு அதைப்புகள், பின்புறத்தில் சிறகுகள் இருப்பதற்குப் பதிலாக இருக்கின்றன. இவ்விரு அதைப்புகளைத் 'தூக்குக் குண்டுக'ளென்றும் அழைப்பார்கள். பறந்து செல்லும்போது, இந்த அதைப்புகளைக் கழற்றிவிட்டால், ஈக்கள் சமநிலையை இழந்துவிட நேரிடும் என்று விலங்கியல் நூலிற் பாண்டித்தியம் பெற்றவர்கள் கூறுகிறார்கள். உடம்பின் வேறு பகுதிகளைத் துண்டித்துவிட்டால் அவிவேகிகளாகிவிடும்.

வீட்டு ஈக்களுக்குக் கடிக்கும் குணமில்லை, வீட்டுக் கொசுக்களுக்கும் அக்குணமில்லை. எங்களிற் சிலருக்கு, ஈக்கும் கொசுவுக்குமுள்ள வேறுபாடுகள் புரி



யாது. (ஈக்களுடன் நாம் எப்படிக் கூடிப் பழகவேண்டும் என்பதை அறிவிக்கும் நோக்கத்துடன், ஈ வரும் முன்னர் கொசு வரும்.) உங்களைப் புண்படுத்தக்கூடிய வகையில் கடிப்பது மாட்டு ஈ தான். எந்தச் சாதியாக இருந்தாலும்—ஆணுறு லென்ன, பெண்ணுறுலென்ன—ஒன்றைப் போலவே மற்றதும் கெட்டது. மாட்டு ஈப் பெண்மணிகள், மாடுகளையும் சில மனிதர்களையும் நெருங்கித் தாக்கும். ஈ ஆண்கள், மரங்களிலூறும் சாற்றை அருந்தி, ஊர் நிலையையும் கால நிலையையும் அடக்கியாளும்.

தலை விறைத்த ஈக்கள் இலங்கையில் அதிகம். இந்த வர்க்கத்தைச் சேர்ந்த புருடர்களின் சகவாச ஆசாரம் கேவலமானது. சில ஆண் ஈக்கள் துணைவியைத் தேடியதும் மாண்டு விடுகின்றன. தலைவிகளைத் தேடித் தேடி அலைவது வேறு சிலவற்றின் தலைவிதியே! ஒன்று மாத்திரம் முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. ஒரு ஈக்குத் தன் பாட்டனுரைத் தெரியாமலிருக்கக்கூடும் ஆனுலும், அதனுடைய குடும்ப கோத்திரங்களை விபரிக்க என்ருல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இதற்கிடையில், உங்களுள் சிலருக்கேனும், நான் சில மனித ஈக்களைப் பற்றியும் சூசகமாகச் சொல்லுகின்றேன் என்பது விளங்கியிருக்கக் கூடும். அதனால், பின்பு நான் கவலைப்படக்கூடிய விதத்தில் எதையாவது உளறிவிடக்கூடுமோ என்ற பயத்தினாலேதான் நிறுத்திக் கொள்ளுகின்றேன்.

*



# முணுமுணுப்பு மசோதா

யுத்த காலத்தில் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்கு யாழ்ப்பாணம்சென்றிருந்தேன். அங்கே ஒரே முணுமுணுப்பு. நான் ஒரு யாழ்ப்பாணத்தவன். ஒரு யப்பான்காரனாகவோ வெள்ளைக்காரனாகவோ நான் ஜெனிக்காது, இந்தப் புண்ணிய பூமியில் யாழ்ப்பாணத்தவனாகவே பிறந்ததற்காக என் முன்னோருக்கு—முக்கியமாக என் தாய் தந்தையருக்கு—என் ஸ்துதி. யாழ்ப்பாணத்தில் பிறந்தபடியால் இவர்களுக்குரிய சகல சம்பத்துக்களிலும் என் பங்கைத் தருமாறு வற்புறுத்துவேனாகில் என்மேல் நீங்கள் துவேஷம் பாராட்டக்கூடாது. யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமானதாகவும் பரிசுத்தமானதாகவும் பரிமாறப்பட்டுவரும் முணுமுணுப்பை நான் முதுசொமாகப் பெற்றுக்கொண்டதனால் அளவிலா ஆனந்த

J-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைகின்றேன் என்பதை நினைத்து நீங்கள் ஒருவரும்கண்ணீர்கொட்டக்கூடாது. முணு முணுப்பு எங்களுடைய பிறப்புரிமை.

நாங்கள்—அதாவது முணுமுணுப்பவர்கள்—பிறந்திருக்காவிட்டால் இந்த உலகத்தின் முன்னேற்றம் எத்தனையோ முட்டுக்கட்டைகளில் தட்டுப்பட்டிருக்கும். முணுமுணுப்பின் அந்தரங்க இரகசியம் மிகவும் மேன்மையானது. அதை அறிந்துகொள்வதும் கஷ்டமல்ல. ஆகர்ஷண சக்தியைப்போல சுலபமானது. என்றாலும், பலமுள்ளது. உலகத்தில் நடக்கும் சகல விஷயங்களிலும் எங்களுக்குத் திருப்தியேயில்லை. ஒரே முணுமுணுப்பு. அரசாங்கத்தார் நல்லெண்ணத்துடன் 'அளந்து' தரும் அரிசியைப் பார்த்து முணுமுணுப்பு. பலமளிக்கும் கோதுமையைக்கண்டால் வயிற்றுவலி. மச்சான் கல்யாணம் செய்தால் பெண்பகுதி சாதியில் குறைந்தவர்கள். தம்பிக்குப் பேச்சுக்கால் நடந்தால் சீதனம் போதாது. சென்னையில் சங்கீதம் பயின்ற என் மகள் வீட்டிலிருக்க, சும்மா இருந்த இவள் அகில இந்திய ரேடியோவில் கச்சேரி



செய்கிறுளே! எனக்கு அறிவிக்காததால் நான் பெரியப்பாவின் சாவீட்டுக்குப் போகவில்லை. இப்படி முணுமுணுப்பில் பலவகையுண்டு. அதிருப்தி வளர்ந்து முணுமுணுப்பு உண்டாகும். கீழ் நோக்கினுலென்ன, மேல் நோக்கினுலென்ன முணுமுணுப்பு அவசியம். முன்னேற்றத்திற்கு இது ஓர் ஏற்றதுணை. சந்தேகமுண்டா? ஏன் முணுமுணுக்கிறீர்கள்?

யுத்த காலத்தில் அரசாங்கத்தாரின் வரும்படி போதாதாம். செலவுகளைக் குறைக்கவும், வரும்படியை அதிகரிக்கவும் அரசாங்க சபையில் உள்ளவர்களெல்லாம்சேர்ந்து மண்டையைவெடிக்கப் பண்ணி, மனத்தைக் கூழாக்கி, வீண் கலவரத்துக்குள்ளாகிறுர்கள்.

பொதுஜனங்களே! மகாஜனங்களே! என்னை மாத்திரம் அரசாங்க சபையில் ஒரு நியமன அங்கத்தவராக (இல்லை, இப்பொழுது ஜனங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? உங்களை ஏன் நான் கெஞ்ச வேண்டும்? நீங்கள் நாசமாகப் போனுலென்ன! பாழ்பட்டுப் போனுலென்ன...) அரசாங்கத்தார் ஆக்குவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களேயாஞல் (தேர்தலிலே சமாளித்துக் கொள்வது கஷ்டம் என்பதிஞலேதான் நியமன உத்தியோகம் கேட்கின்றேன்) வரும்படியை உயர்த்துவதற்கு ஒரு 'சோக்கான' மசோதா சமர்ப்பிப்பேன். என் மசோதாவைச் சமர்ப்பித்து இப் படித்தான் பேசுவேன்:-

''இலங்கைத் தீவில் வசித்துவரும் பன் னிரண்டு வயதுக்கு மேற்பட்ட ஆணே பெண்ணே முணுமுணுப்பு 'லைசென்சு' இல்லாமல் முணு முணுத்தல் கூடாது. இந்த உத்தரவுச் சீட்டைப் பெறுவதற்கு அரசாங்கத்தார் கொடுக்கும் பத்திரத் தில் இருபது ரூபாய் பெறுமதியான முத் திரை ஒட்டி, அதன் குறுக்கே தங்கள் கையெழுத்தால் கிறுக்கி, முத்திரையை அலங்கோலப் படுத்திவிட வேண்டும். எழுதத் தெரியாதவர்கள், தங்கள் பெரு விரலிலுள்ள வரைகளில் வர்ணம் தீட்டி அம்முத்திரிரையை அழகு படுத்தலாம். இதற்கு மூவர் சாட்சிக் கையொப்பம் போட வேண்டும். இதனை வருஷா வருஷம் புதுப்பிக்கவேண்டும். அரசாங்க அதிகாரிகள் கேட்டநேரமெல்லாம் இதை நீட்டவேண்டும். ஒருவரின் சீட்டை இன்



ெஞருவர் உபயோகிக்கக் கூடாது. அப் படி உபயோகித்தால் அபராதம் விதிக் கப்பபப்படும்..."

''இலங்கைத் தீவில் வசிக்கும் என் பதை இலங்கைத் தீவில் பிறந்த என்று மாற்ற வேண்டும். அந்நியர்கள் இன் றைக்கிருந்துவிட்டு நாளைக்கு மூட்டை கட்டுகிறவர்கள். வீடு தேடி வந்தவர்களை உபசரித்து அனுப்புவதே பெருந் தன்மை'' என்று இன்ெஞரு அங்கத்தவர் இடைமறித்து முணுமுணுக்கலாம்.

''வீடு தேடி வந்தவர்கள் வந்த காரி யம் முடிந்ததும் வண்டியைத் திருப்பா மல் 'ஒட்டடோ ஒட்டு' என்ற மாதிரி எங்களுடன் ஒட்டிக் கொண்டால் நாங் கள் என்ன செய்வது? அதே சமயம் அந்நியருக்கு ஒரு சலுகை காட்டலாம். இவர்கள் பத்து ரூபாய் முத்திரை ஒட்டி உத்தரவுச் சீட்டுப் பெறவேண்டும். நீங் கள் எல்லோரும் இதை ஏகமனதாக அங்கீகரிப்பீர்களென்று நம்புகின்றேன். வந்தனம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அரசாங்க சபையாம்; அங்கத்தவராம்; மசோதாவாம்; சானா ஏதோ அலட்டுகிறார்' என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதில் விழுகின்றது. யுத்தகால யாழ்ப்பாணத்தில் என் காதில் விழுந்தவையெல்லாம் முணுமுணுப்புகளே! இதனால் என் மேல் வீடு 'பிசகிப்' போய் விட்டதாகும். மன்னியுங்கள். *



இவர்களை மட்டும் முணுமுணுப்புச் சட்டம் கட்டுப்படுத்த மாட்டாது.



# சானாவைப் பற்றி...

இதுவரையிற் சானாவின் பதினொரு பேனாச் சித்திரங்களை வாசித்து, அவரைப்பற்றிய கற்பனையிலே திளைத்திருக்கும் உங்களை இங்கு நிறுத்தி, நாடக மேடைக்கு வெளியே வாழும் சானாவைப் பற்றிய சில வாழ்க்கைக் குறிப்புகளைத் தருகிறோம். கார்த்திகேசு செல்லத்துரை - சிவகங்கை தம்பதிகளின் மூத்த புதல்வனான சண்முகநாதன் 11-1-1913 இல், வெள்ளவத்தையிற் பிறந்தார். தாய்வழிப் பாட்டனார் அருளப்பா இவருடைய இளமைப் பருவத்து வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார். பரமேஸ்வராக் கல்லூரியிற் பயின்ற இவர், சென்னை அரசினர் சித்திரக் கல்லூரியிலும், கொழும்பு டெக்னிக்கல் கல்லூரியிலும் பயின்று தேர்ந்த சைத்திரிகரானார். 1937-40 வரை, ஈழகேசரியிற் சைத்திரிகராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார். யுத்த காலத்தில், அமெரிக்க ஒற்றர் பகுதியிற் பணிபுரிந்து, அரையாண்டு காலம் யப்பானிலும் வாழ்ந்தார். சென்னையில், ஆறாண்டு காலம் சினிமா ஸ்டுடியோக்களிலே பணியாற்றிய இவர், எட்டு சினிமாப் படங்களுக்கு ஆர்ட் டைரக்டராகக் கடமையாற்றியுள்ளார். பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகவிருந்த பொழுது, 1951 ஆம் ஆண்டில் வானொலித் தமிழ் நாடகத் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்டார். எட்டு மாத காலம் இங்கிலாந்திலே இதற்கான விசேடப் பயிற்சி பெற்றார். இவரை 'சானா' என்றும், 'லண்டன் கந்தையா' என்றும் இலங்கை நேயர்கள் அறிந்த அளவிற்கு, செ. சண்முகநாதன் என்று அறியமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகநாதனும் சாஹுவும்

செல்லத்துரை சண்முகநாதனுக்கு சாஹுவைப் பார்க்க நெடுநாளைய ஆசை. சாஹுவின் அழகைப் பார்ப்பதற்கல்ல. சாஹுவைப் பற்றிப் பலபேர் பல மாதிரிச் சொல்லுகிறார்கள். ஆகையினால், நேரிற் பார்த்துப் பேசினாற்றான், தன் ஜென்மம் சாபல்யம் அடையுமென்பது சண்முகநாதனின் நம்பிக்கை. 'சாஹு' வைப் பார்ப்பதென்றால் இலேசான காரியமல்ல. 'அவன் ஒரு அங்கிடுதத்தி; பல தொல்லைக்காரன்; அண்டங் காகம் போல் அங்கலாய்த்தலைபவன்' என்று ஊரிலே கதை. இந்த அபிப்பிராயம் காட்டுத் தீ போல பரவி வருகிற காலத்திலே, பத்திரிகைக் காரியாலத்திற்குள் ஒரு நாள் சண்முகநாதன் நுழைந்தார். முன் அறையிலிருந்த பத்திராதிபரைத் தாண்டிக்கொண்டு, அவர் என்மேசையை



அணுகினார். திறந்த வீட்டிற்குள் நாய் நுழைவதுபோல இப்படி யாரும் வருவது வழக்கம். இதைத் தடுக்க நாங்கள் முயன்றபோதிலும், வருபவர்கள் இதில் துளியளவு சிரத்தையும் எடுக்கவில்லை. எனவேதான், சண்முகநாதனால் உல்லாசமாக உள்ளே வரமுடிந்தது. இதில் ஒருவரிலும் பிழையில்லை. நாங்களும் எங்களாலானதைச் செய்துவந்தோம். அவர்களும் தங்களாலானதைச் செய்து வந்தார்கள்.

சண்முகநாதன் உள்ளே வந்ததும் பெரிதாக ஒரு 'கும்பிடு' போட்டார். ''என்ன காரியம் வந்தது?'' என்று வினவினேன். அதிலிருந்து சம்பாஷணை தொடங்கிற்று. கதை கொடுத்தது என் பிழை. பேச்சின் சாரம் பின்வருமாறு அமைந்தது:

சண்: இல்லை. சும்மா ஒரு தரம்பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்.

நான்: சந்தோஷம்... பார்த்து முடிந்தால் போகலாம் தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்: உன்னோடு சில காரியங்கள் பேச வேண்டுமென்று பல நாட்களாக என் எண்ணம். அதற்காகவே வந்தேன்.

நான்: என்ன? மரியாதையில்லாமல் நீ நான் என்று பேசத் தொடங்குகிறீர்? மரியாதையாக உம்மை நான் நடத்தி அனுப்ப வேண்டுமென்ற எண்ணம் உமக்கு இருக்குமானால், என்னைக் கௌரவத்தோடு நடந்தும். இப்படியான சில பழக்க வழக்கங்கள் உங்களூரில் நடைமுறையில் இல்லாவிட்டால், எங்களூரில் சில காலம் தங்கியிருந்து பழகிப் போவது உமக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும். (இந்தப்பதிலை இவர் என்னிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. மலைத்துப் போனார். சில மனிதர்களை இவ் வகையாக, வெருட்டி வைக்காவிட்டால், ஒரு காரியமும் நடக்காது. இதையறிந்து தானேபலர் இந்தஏமாற்று விளையாட்டுக்களைக் கையாண்டு வருகிறார்கள். இதனால் நன்மை உண்டு.)

சண்: கோபிக்காதீர்கள்; உங்களைக் கோபப் படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் சொல்லவில்லை; மன்னியுங்கள்.



நான்: வீண் கதை பேச எனக்கு நேரம் இல்லை. விருப்பமும் இல்லை உண்மையாகவே மன்னிப்புக் கேட்கின்றீரா, அல்லது வந்த காரியம் பலிக்க வேண்டுமே என்றதின் பொருட்டுச் சாகசம் செய்கிறீரா? அது இருக்க, சுத்தமான செந்தமிழை இலக்கணத்தோடு பேசுகிறீர். பேச்சாளர்களுக்கும், இலக்கியக்கட்டுரையாளர்களுக்கும் தான் அதில் தனி உரிமை உண்டென்று உமக்குத் தெரியாதோ? நீர் என்ன சாதி?

சண்: வெள்ளாஞ்சாதி. மாப்பாணமுதலி வம்சம் என்று மூப்பன் சொல்லக்கேள்வி.

நான்: ஏன், நிற்கிறீர்? அப்படி அந்த நாற்காலியில் உட்காரும். (வந்த உடனேயே இவரை உட்காரச் சொல்லியிருந்தால், என்னைப்பற்றி என்ன நினைப்பார்? இப்படித்தானுக்கும் வருகின்றவர்களுக்கெல்லாம் இவர் மரியாதை செய்கிறவர் போலும் என்று என்னை இழிவாக நினைக்கக் கூடும். ஒருவனை அளந்து அதற்குத் தகுந்தபடி அவனை நடத்த வேண்டுமென்று மூத்தோர் சொன்னதை நாம் மறக்கலாமா? உலகத்

தோடும் ஒத்துழைக்க வேண்டும். இல்லா விடில் எங்களுக்குள் ஒற்றுமை எங்கே?)

சண்: இந்த யுத்தத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

நான்: யுத்தம் தொடங்கியது எனக்கு நிரம்பச் சந்தோஷம். ஏன் என்று கேட் கிறீரா? ஒரு தேசம் இன்னொரு தேசத்தை அடக்கியாள்வதையும், ஆக்கிரமிப்பதை யும் ஒழிப்பதற்காகத் தொடங்கியது மகாயுத்தம். காரணம் நன்மையாது. ஆனால், இந்த யுத்தம் முடிந்தால்தான் திரும்பவும் சந்தோஷமடைவேன். அதற் கிடையில் நடந்து வருவதைத் தினசரிப் பத்திரிகைகள் மூலம் அறியலாம். (இவர் பத்துச்சதம் செலவிட்டுப் பத்திரிகை பார்த்தாலென்ன? இந்த யுத்த காலத் தில் பணந்தானிருக்கிறதே. பணத்துக் குப் பஞ்சமா? பத்திரிகைக்குத்தான் பஞ்சமென்றால், பத்திரிகை நிலையத்தில் போய் வாசிக்கலாம். தினசரிகள் பிர சுரமாவது, உங்களுக்காகவே. தொழில் முறையில் வித்தியாசமோ, பொரு மைமோ பாராட்டாது, தினசரிகளுடன் ஒத்துழைக்கப் பத்திரிகைகள் வாங்குவது



எங்கள் கடமை. பத்திரிகை வாசிப்பது உங்கள் கடமை. எவ்வளவு விரிந்த மனப்பான்மை!)

சண்: இந்த யுத்தம் எப்போது முடியு மென்பது உமது எண்ணம்?

நான்: இதில் எனக்கொரு நிதானமில்லை. அது ஒருவருக்குந் தெரியாத ஒரு பரம இரகசியம். இந்த இரகசியத்தை நீர் அறிந்தும் ஒரு பயனில்லை. அதனால், உமக்கு ஒரு சுகமும் வரப்போவதுமில்லை.

சண்: அப்படியானால், யப்பானைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

நான்: யப்பான் என்பது பஸிபிக் சமுத் திரத்தில் சிறு தீவுகள் பல சேர்ந்த தீவுக் கூட்டம். ஒரு எரி மலைக்கும், பல பல்லுக் கட்டிகளுக்கும் பெயர் போனது. (இது ஒரு சில்லறைப் பகிடி என்று நீங்கள் நினைக்கக் கூடும். சில்லறைப் பகிடிகளுக்குச் சிரிப்ப வர்களுமுண்டு. எல்லோர்க்கும் திருப்தி அளிப்பதே என் கொள்கை. இவ்வித மான பகிடிகள் சில்லறையுமல்ல, இதற் குச் சிரிப்பவர்கள் சில்லறைகளுமல்ல. உங்களைக்கொண்டு மற்றவர்களை மதிப் பிடாதீர்கள்!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்: சாஞு! நான் சொல்லுகிறே னென்று கோபிக்கவேண்டாம். நீர் ஒரு பொல்லாத ஆள்.

நான்: என்னை நன்ருயறிந்தவர்கள் யாரோ உமக்கிதைச் சொல்லியிருக் கிருர்கள். இல்லாவிடில் உமக்கு எப்படித் தெரியும்? உலகம் முழுவதுமே இதுதான் பேச்சு. (இந்த ஒரு அலுவலிலாவது எவ் வளவு ஒற்றுமை உலகத்தில் நிலவி வரு கிறது பாருங்கள். இதல்லவோ ஒற்று மைக்கு அழகு!)

சண்: கேலி செய்வதை விட்டு விட்டு இந்த ஐம்பதுக் கைம்பதைப்பற்றி உமது உண்மையான அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.

நான்: ஐம்பதுக் கைம்பதைப் பற்றிச் சொல்ல எனக்கு அதிகம் வராது. அது எனக்குச் சொந்தமானதல்ல. செலவை பொருட் படுத்தாது, அதைத் தயாரித்த வரை ஒருதரம் கண்டு பேசினுல், அதன் உண்மைகளை விளக்கிக் காட்டு வார். அவர்தான் அந்தச் சாமர்த்தியம் பொருந்தியவர். (பிறர் சொத்தைப் பங் கிட வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை. எங்கள் தேசம் சம்பந்தமான பிரச்சினை



களை அலசிப்பார்த்து, நன்மையான வற்றைத் தெரிந் தெடுப்பது எங்கள் ஒவ்வொருவரின் கடமை. ஆஞல், இதொன்றில் மாத்திரம் என்னை விலக்கி வைக்கவேண்டும். அநாவசியமாக ஒரு வரோடு முட்டிக்கொள்வதில் எனக்கு அதிகம் விருப்பமில்லை, ('சாஞு' பயந்து விட்டானென்று நீங்கள் எண்ணக்கூடும். அப்படியல்ல. சுயநலங்கருதியே!)

சண். உமக்குக் கல்யாணம் ஆகி விட் டதா?

நான்: பார்த்தீரா? கொஞ்சம் இடம் கொடுத்து விட்டால் குடும்ப விவகாரங் களிலேயே பிரவேசிக்கிறீர்.

சண்: இல்லை. உமது நன்மையைக் கருதியே கேட்டேன். அதில் என்ன குறை இருக்கிறது?

நான்: அது உம்மால் முடியும் காரியம் என்று நினைக்கிறீரா? அச் சுபகாரியங் களைப் பெரியோர்கள் கூடி நிச்சயப் படுத்திஞல் தான் ஆகும். பார்க்கப் போஞல் முப்பத்திரண்டு வயதுதானிருக் கும் உமக்கு. அதற்குள் பெரியவராகப் பார்க்கிறீரே? (நான் பார்த்த பெரியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எல்லோரும் உண்மையில் பெரியவர்கள்தான். பெரும் எண்ணம். இதை நிலை நாட்டுவதற்கு இப்பெரியவர்களுக்குப் பின்னும் முன்னுமாக பல தினுசான மனிதர்கள் திரிகிருர்கள். இவர்கள்தான் வருங்காலத்துப் பெரியார்கள். முன்னேற்றத்திற்கு எவ்வளவு முன்னேற்பாடு!)

சண்: அப்படியானுல், தமிழருக்காகப் பாடுபடும் பெரியவர்கள் சிலரைக் கூற முடியுமா?

நான்: நன்ருக. சட்டென்று சொல்வதானுல் நீரும் நானும். (பார்த்தீர்களா எனது பெரும் எண்ணத்தை? ஒருவனுக்குத் தற் பெருமை அவசியம் இருக்க வேண்டும். மற்றவர்கள்தான் பெரியவர்களைப் பாராட்டாவிட்டாலும், சொந்த வீடுகளிலாவது 'நாட்டாண்மை' செலுத்தலாமல்லவா? அத்துடன், எனது பரோபகார சிந்தனையையும் கவனித்தீர்களா? பக்கத்திலிருப்பவரையும் தட்டிக்கொடுத்துவிட்டேன். உலகத்திலே ஒரு மனிதனென்ருல் 'சாணு' தான் என்ற எண்ணத்தையும் அவருள் புகுத்திவிட்டேன். மன்னுயிரையும் தன்னுயிர் போல நினை!)



சண்: சாணு! என்னையும் உம்மோடு சேர்க்க வேண்டாம். உண்மையில் நீர் ஒரு பெரும் பிறவிதான். (இதில் என்னை தட்டிக்கொடுப்பதாக அவருக்கு ஒரு வீண் எண்ணம். இப்படியாக நிலை குலைந்து அழிந்து போகிறவர்கள் பலர். ஊழ்வினை என்பது பொய்யாகுமா?)

நான்: அப்படிச் சொல்லவேண்டாம். நீரே நன்ருக யோசித்துப்பாரும்.


சண்: என்னதான் இருந்தாலும்... இருக்கட்டும் சாணு, நேரமாகிவிட்டது. உம்முடைய வேலையையும் குழப்புகிறதாக முடியும். ஆறுதலாக இன்னொரு நாள் வருகிறேன். வணக்கம்.)

நான்: அதற்கென்ன? இடையிடையே கட்டாயமாக வரவேண்டும். (அவரை நான் பெரியவர் என்று சொன்னதும் அவரால் பொறுத்திருக்க முடியவில்லை. இதை யாரிடமாவது கட்டாயம் சொல்ல வேண்டுமென்று வெளிக்கிளம்பி விட்டார்.)

நான் அவரைத் தட்டிக்கொடுத்தது போல், அவரும் இன்னொருவரைத் தட்

டிக்கொடுப்பார். இவ்வகையாக இச் சிறு தட்டு யாழ்ப்பாணம் முழுதும் பரவுமானல்... பிறகென்ன? நான் பெரியவன், நீ பெரியவன் என்ற வித்தியாசம் கிடையாது. சமத்துவம் நிலவும். அதுவே சேமம்.)

*



இது ஓர் உச்சி மகாநாடு. இரகசியம் மிக மிக அவசியம்.